தென்மொழி

தமிழ்வாயிற் கல்வியே எல்லாம் என்று உறுதிசெய்க!

தேங்குசுவை மிகுதமிழைத் தாய்மொழியாய்ப்
　　பெற்றிருந்தும் அதனை விட்டே
ஆங்கிலத்தைத் தமிழ்நாட்டு மழலையர்தம்
　　வாய்களிலே திணித்து வைத்துத்
தீங்குசெயும் பள்ளிகளைத் தடைசெய்க
　　திசைமாற்றி விடுக என்றால்
வீங்குபுகழ் முதலமைச்சர் கலைஞரதைச்
　　செய்வதற்கு விரும்ப வில்லை!

எள்ளிநகை யாடிநறுஞ் செந்தமிழைப்
　　புறக்கணிப்பார் ஆங்கி லத்துப்
பள்ளிகளின் விழவெனினும் முதலமைச்சர்
　　முதல்அமைச்சர் பலருஞ் சென்று
விள்ளுகின்றார் அறிவுரைகள் வெள்ளையப்பன்
　　விளையாட்டை என்ன சொல்வோம்
ஒள்ளியசீர் முதலமைச்சர் கலைஞர்தமிழ்
　　போற்றுகெனக் குழைகின் றாரே!

என்ன ஒய் போற்றுவது தமிழ்வாழ்த்துப்
　　பாடுவதா நூல்கள் தம்மைப்
பொன்னேபோல் பளபளப்பாய்ப் பூட்டிவைத்துக்
　　காப்பதுவா தமிழுக் காக
முன்னின்று மாண்டவர்தம் முதுகாடே
　　அரியணையாம் உணர்வி ருந்தால்
இன்னேசெந் தமிழ்வாயிற் கல்வியே
　　எல்லாமென்(று) உறுதி செய்க!

—இறை

உள்ளே...

ஒற்றுமை தன்னிலும் உரிமையே பெரிது!

தமிழ்நாட்டரசைக் கலைப்பது தமிழ்த்தேசிய உணர்வைச் சிதைப்பதே!

அறுபருவத் திருக்கூத்து (இளவேனில்)

சொல்லியல் - பாசம்

இளவேனிலும் இலக்கியமும் (வினா - விடை)

தமிழ்த் தேசியமும் சாதிய ஒடுக்குமுறையும்!

மக்களவை

செய்திகள்

நமக்கு வந்த மடல்கள்

சொல்லதிகாரம்

சுவடி - 30
ஓலை - 5
விலை உரு. 4-00

தூய தமிழ் இலக்கியத் திங்களிதழ்

தி.பி. 2029 விடை (மே - 1998)

ஒற்றுமை தன்னிலும் உரிமையே பெரிது!

வெற்று மை எழுத்தில் வீராப்புப் பேச்சில்
கற்ற, கை வரிசை காட்டியே மக்களை
ஏற்றிப் பிழைக்கவும் ஏய்த்துப் பிழைக்கவும்
ஒற்றுமை என்றும் ஒருமைப்பா டென்றும்
சுற்றிச் சுற்றிப் பேசுகி றீர்கள்!
வெற்று வயிறுகள்! வெறுமை உடம்புகள்!
முற்றமும் இன்றிப் பாதைகள் ஓரம்,
குற்றுயி ராயும் குலைஉயி ராயும்
தொற்று நோயோடு துன்பப் படுவதைச்
சற்றே நின்று, சாய்க்கடைப் பகுதியில்
உற்றுப் பார்த்தே உணர்ந் திருப்பீர்களா?

ஒற்றுமை என்ன? ஒருமைப் பாடென்ன?
உதவாக் கரைகளே! ஓ! உதவாக் கரைகளே!
ஒற்றுமை தன்னிலும் உயிரே பெரிதடா,
உதவாக் கரைகளே! ஓ! உதவாக் கரைகளே!

கோயிலைக் கட்டிக் குழவியை வைத்து,
வாயிலில் கோபுரம் வானளவு உயர்த்தி,
நோயினில் விழுந்தவர் நொடிந்திடும் ஏழைகள்
ஆயிரம் நாளும் வணங்குவீர் என்றே
வாயுரம் பேசியே வஞ்சிக்கும் நீங்கள்,
காய்களும் கனிகளும் கறிகளும் உண்டு,
நோய்களும் இன்றி நொடிகளும் இன்றிச்
சாய்ந்த மெத்தைச் சொகுசு வண் டிகளில்
ஓயாமல் நாளும் ஊர்வலம் வந்தே
காயாமல் காயும் ஏழைகள் காதிலே
மாய்மால ஒற்றுமை ஒருமைப்பா டென்றே
வாயால் கத்தியே வாழுகின் றீர்களே!

ஒற்றுமை என்ன? ஒருமைப்பா டென்ன?
உலுத்தர் இனங்களே! ஓ! உலுத்தர் இனங்களே!
ஒற்றுமை தன்னிலும் உரிமையே பெரிதடா,
உலுத்தர் இனங்களே! ஓ! உலுத்தர் இனங்களே!

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்

— (தென்மொழி, சுவடி : 21, ஓலை : 2)

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி.பி.1990 (1959)

நிறுவனர் : பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தென்மொழி

மொழி—இனம்—நாடு

நம்மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடையமுடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

ஆசிரியர் : தாமரை பெருஞ்சித்திரனார்

சுவடி. 30)　　தி.பி. உ0உசு - விடை (மே-'98)　　(ஓலை. 5

தமிழ்நாட்டரசைக் கலைப்பது தமிழ்த்தேசிய உணர்வைச் சிதைப்பதே!

'அயோத்தியில் பாபர் மண்டபம் இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயில் கட்டும் பணி தொடங்கப்பட்டுவிட்டது; கட்டுமானப் பொருள்கள் இராசத்தானிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன; சிலைகள், தூண்களெல்லாம் வடிவமைக்கும் வேலை நடைபெற்று வருகிறது; வாய்ப்பான சூழல் அமையும் போது கோயிற் பணி நிறைவெய்தும்' என்னும் செய்தி வெளியாகியுள்ளது.

மதவெறிக் கட்சி என்னும் அவப்பெயரை மறைக்கவும் அதன் மூலம் கூட்டணிக் கட்சிக்காரர்களை நிறைவுபடுத்தவும் 'இராமர் கோயில் கட்டும்பணி மேற்கொள்ளப்பட மாட்டாது' என்று தலைமையமைச்சர் ஒருபக்கம் உறுதிமொழி அளித்தாலும் இன்னொருபக்கம் அக் கோயில்கட்டுதற்கான அடிப்படை வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இது முரண்பாடு போலத் தோன்றினாலும் பாரதீய சனதாக் கட்சியின் நடவடிக்கைகளைக் கூர்ந்து பார்த்தால் அக்கட்சிக்கு இஃது இயல்பானதே என்பது புலப்படும். பாபர் மண்டபத்தை இடிக்கமாட்டோம் என்று உச்ச நெறி மன்றத்திலேயே எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தவர்கள்,

அப்படிக் கையெழுத்திட்ட மை காய்வதற்கு முன்னாலேயே பாபர் மண்டபத்தை இடித்துத் தரைமட்டமாக்கவில்லையா?

ஆட்சியைக் கைப்பற்றவோ, கைப்பற்றிய அதனைக் காப்பாற்றிக் கொள்ளவோ எத்தகைய ஊழல் முதலைகளோடும் கூட்டணி அமைத்துக்கொள்ளவும் நிறைவேற்றவியலாத எத்தகைய உறுதிமொழிகளையும் வாரிவிடவும், எப்படிப்பட்ட தீங்கியல் குற்றச் சாட்டுக்ளுக்கு ஆளானவர்களையும் அமைச்சர்கள் ஆக்கவும், நெருக்கடி நேர்ந்தால் அவர்களுட் சிலரை நீக்கவும் தயங்காத பாரதீய சனதாக் கட்சி அரசு மதவெறிச் செயல்களை மட்டும் கண்டுகொள்ளாது — கைநெகிழ விடாது என்பதற்கு எடுத்துக்காட்டே இராமர்கோயில் பற்றிய அண்மைச் செய்தி.

தமிழ்நாட்டில் தமிழீழத்துக்கு ஆதரவாகக் குரல் கொடுத்துக் கொண்டிருந்த பாட்டாளி மக்கள் கட்சியும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் ஏதோ ஓர் எதிர்பார்ப்புடன் தம் முன்னைய போக்குகளுக்கு முற்றும் மாறாகச் செயலலிதாவோடு ஒட்டிநின்று பாரதீய சனதாக் கட்சியுடன் தேர்தல் கூட்டணியில் கைகோத்துக் கொண்டபோது, இப்போதைய பாதுகாப்புத் துறை அமைச்சர் சியார்சு பெருனாண்டசையும் கணக்கிலெடுத்துக் கொண்டு, தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களெல்லாம் ஒரணியில் ஒன்றி நிற்பதாகவும் பா.ச.க. ஆட்சிக்கு வந்தால் தமிழீழம் கிடைத்துவிடும் என்றும் ஒரு கருத்து மக்களிடையே பரப்பப்பட்டது. ஆனால் அக் கட்சித் தலைவர்களேகூட அதனை உண்மை என்று நம்பியிருக்க முடியாது.

வடபுலத்தவர்களைப் பொறுத்தமட்டில், அவர்கள் யாராக இருந்தாலும் தமிழ்நாட்டவர்களின் உரிமையுணர்வை மதித்தோ அவர்களின் நலங்கருதியோ ஒரு சிறு துரும்பையும் அசைக்க மாட்டார்கள். பேராயமாயினும் வேறாயமாயினும் ஒன்றே. இது பனிமலை போலும் உறுதி!

இற்றைப் பாதுகாப்புத் துறை அமைச்சர் சியார்சு பெருனாண்டசு தமிழீழ விடுதலையில் ஆர்வமும் அக்கறையுங் கொண்டிருப்பது பாராட்டத்தக்கது. அப்படி மக்கள் உரிமையில் நாட்டங்கொண்ட அவர் பீகாரில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியைச் செயல்படவொட்டாது 356-ஆவது சட்டப்பிரிவைப் பயன்படுத்திக் கலைத்தே தீரவேண்டும் என்று வற்புறுத்துவது எவ்வகையில் நயன்மையானது? ஞாயமான தமிழீழக் கோரிக்கையே யானாலும் நயனின்மையை நயக்கும் இவர்தம் குரல் எந்த அளவு வலிமையுடையதாகவும் பயன்விளைப்பதாகவும் இருக்கும்?

தமிழீழ ஆதரவுக் கட்சிகள் எனப்படுவன செயலலிதாவின் கண்ணசைவுக்குக் காத்து நிற்கும் நிலையில், தொண்டர்களை ஏமாற்றத்துக்கு ஆளாக்குவதைத் தவிர வேறு என்ன செய்துவிட முடியும்?

இனி, தமிழ்நாட்டில் தி.மு. கழக ஆட்சியைக் கலைத்தே தீர வேண்டும் என்று இங்கே செயலலிதாவும் அவரைச் சார்ந்த வாழப்பாடி இராமமூர்த்தி, அரங்கராசன் குமாரமங்கலம் உள்ளிட்ட சிலரும் ஓங்கி ஓங்கிக் கத்துவதும், தலைமையமைச்சர் வாச்சுபேயி 356 தவறாகப் பயன்படுத்தமாட்டாது என்று வாய்மொழிவதும் வானிலையறிவிப்புப் போல் அன்றாடச் செய்திகளாகிவிட்டன.

தலைமையமைச்சர் இவ்வாறு உறுதியளித்துக் கொண்டிருக்கும் அதேநேரத்தில், “வேறுவழியில்லை என்றால் 356-ஆவது சட்டப்பிரிவைப் பயன்படுத்துவோம்'' என்கிறார் உள்துறை அமைச்சர் அத்துவானி. அன்றியும் அவர், தமிழ்நாட்டில் கொடுவினைகள் நடைபெறுவதாகவும் அயல்நாட்டு ஆற்றல்கள் ஊடுருவிவிட்டதாகவும் அகங்கலாய்க்கிறார். தமது ஆட்சிக்கு முட்டுக் கொடுத்து நிற்கும் காசுமீரத்திலோ, தமது கட்சியே ஆளும் மும்பையிலோ நடைபெறும் கொடுவினை பற்றியெல்லாம் அவர் வாய்திறப்பதில்லை. காசுமீரத்தில் இம்மாதத்திலேயேகூட இரண்டாவது முறையாக பெரும்படுகொலை நடைபெற்றிருக்கிறது. பூஞ்சு நகரில் ஊரடங்கு சட்டம் செயற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் அத்துவானிக்குத் தமிழ்நாடுதான் தட்டுப்படுகிறது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி நடைபெறும் மாநிலத்தில் நடுவணரசின் கண்காணியாக அமர்த்தம் பெற்ற ஆளுநர் இருப்பதே தேவையற்றது என்னும் போது, தமிழ்நாட்டின் நிலையை ஆய்வுசெய்ய நடுவணரசு வெளிப்படையாக ஒரு குழுவை யும் அது செயலலிதாவுக்குப் பொருந்திகையளிக்கவில்லை யென்பதால் பின்னர் மறைமுகமாக மற்றொரு குழுவையும் அனுப்பும் படியான நெருக்கடிக்கு ஆளாகிறதென்றால், அந் நெருக்கடியின் எல்லைதான் என்ன?

தில்லியரசு தனக்கு நெருக்கடி மிகும்போது — ஆட்சியைக் காப்பாற்றிக்கொள்ள அத்துவானியின் கூற்றுப்படி வேறுவழியில்லை என்றால் ‘356-ஐத் தவறாகப் பயன்படுத்தவில்லை; மிகச் சரியாகவே பயன்படுத்துகிறோம்’ என்று சொல்லி, அதற்கான பின்னணியையும் உருவாக்கித் தமிழ்நாட்டில் நடைபெறும் தி.மு.க. ஆட்சியைக் கலைக்கும் என்பது நம்பத்தகாததன்று. மேனாள் குடியரசுத் தலைவர் வெங்கட்டராமனுக்கும் அற்றைத் தலைமையமைச்சர்

சந்திரசேகரருக்கும் 'அல்லாத வழி' ஒன்று கிட்டியது போல், இற்றைத் தில்லியரசுக்குப் பொம்மைவழக்குத் தீர்ப்பின் புலனங்களுக்கும் அப்பால் பொல்லாத வழியொன்று புலப்படக்கூடும். பதவிக்காக எத்தகைய தீவினையைச் செய்யவும் தயங்காதது பாரதீய சனதாக் கட்சி என்பது பல்லாற்றானும் உறுதியான ஒன்று.

தமிழ்நாட்டில் தி.மு. கழக ஆட்சி நிலைப்பதனால் அல்லது நடுவணரசு அதனைக் கலைப்பதனால் மொழி இன அளவிலோ நாட்டின் உரிமைகளைப் பொறுத்தோ மிகப்பெரிய மாற்றங்களோ நலங்களோ இழப்புகளோ ஏற்பட்டுவிடப் போவதில்லை. பெரும் புள்ளிகளுக்கு ஏற்றங்களும், ஏக்கங்களும் ஏமாற்றங்களும் ஏற்படக்கூடும் அல்லது தொடரக்கூடுமே தவிர வேறில்லை. ஆனால், வளர்ந்துவரும் தமிழ்த் தேசிய இன எழுச்சியுணர்வைக் கூர்மைப்படுத்துவதற்கு மாறாக இங்குள்ள இனநலம் பேசும் கட்சிகள் 'சிறியன' சிந்தித்து அவ்வுணர்வைத் திசை மாற்றுவதும் மழுங்கடிப்பதும் காலத்தால் மன்னிக்க முடியாதவை!

தமிழ்நாட்டில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு நடைபெற்று வரும் தி.மு.க. ஆட்சியைத் தில்லியரசு வலிதிற் கலைப்பதென்பது தமிழ்த்தேசிய இனவுணர்வை சிதைப்பதே என்பதில் ஐயமில்லை!

— இறை

வெளிவந்துவிட்டன!

பாவலரேறு ஐயா அவர்களின்

கற்பனை ஊற்று

- உரைப்பா நடையில் அமைந்த தூய தமிழ்நூல்.
- "மெய்யறிவும், கற்பனை யாழமும், கலையழகும், பொருள் நுட்பமும், சொற்செறிவும் மிகுந்த கட்டுரைகள்!"
- நல்லெழிலார்ந்த பல்வண்ண முகப்புடன் கூடிய செம்மையான கட்டமைப்பு!
- முன்னைப் பதிப்பில் இடம் பெற்றனவும், பின்னைத் தென்மொழியில் வெளிவந்தனவும், ஆகிய அனைத்துக் கட்டுரைகளும் அடங்கிய முழுமையான பதிப்பு.

விலை : உரு. 40.00

(பதிவஞ்சலிற் பெற உரு. 55 அனுப்புக!)

அறுபருவத் திருக்கூத்து

— பாவலரேறு பெருஞ்சித்திரனார்—

5. இளவேனில்

காலம் : மேழம் - விடை (சித்திரை, வைகாசி)

பாட்டுச் சுருக்கம்:

பின்பனிக் காலம் மீன மாதத்தொடு கழிந்தது. இனிமை வாய்ந்த மெல்லிய தென்றற் காற்று எங்கணும் மலர்களின் நறுமணந் தாங்கி வந்து தழுவுகின்றது. மேழ மாதத்து இளங்காலைப் பொழுதில், தாம் வாழ்வு பெறுமாறு தமக்குப் பொருட்கொடையால் புத்துயிர் அளித்த வள்ளியோர் முன்னுற்ற புலவர்தம் மகிழ்ச்சி பொங்கும் முகம் போலத் தேன்சிந்துந் தாமரையின் குவிந்த இதழ்கள் மலர்கின்றன. ஆம்பல் மலர்ந்திருக்கின்றது. அழகிய இதழ்களை யுடைய குவளையின் குவிந்த மொட்டுகள் மலர்கின்றன. கொகுடிப் பூக்கள் நகைக்கின்றன. நீரோடையில் கொடிப் பூக்கள் மணம் பரப்புகின்றன.

நல்ல முல்லைக் கொடிகளில் மொட்டுகள் சிரிப்பதுபோல் மலர்ந்திருக்கின்றன. குருக்கத்திக் கொடிகள் மலர்களைத் தாங்கி விளங்குகின்றன. மல்லிகை மொட்டுகள் மலர்கின்றன. புறமடல்கள் விரிந்து தாழையின் செழிப்பான மலர்கள் காட்சியளிக்கின்றன. வெட்சியின் வெண்மையான இதழ்கள் விரிந்து அழகுற விளங்குகின்றன. புள்ளிகளையுடைய வண்டுக் கூட்டம் புதிய தேனைப் பருகுகின்றது.

பொன்னிறத் தளிரையுடைய தேமாமரங்கள் பொலிவுற்றுத் திகழ்கின்றன. மிகுந்த செழிப்புடைய புன்க மரங்கள் நெற்பொரி போலும் பூக்களை உதிர்க்கின்றன. சிறிய இலைகளைக் கொண்ட பொன்னரவிரை மரங்களில் பூக்கள் அடர்ந்து மணம் பரப்புகின்றன. நல்ல அழகு வாய்ந்த குரா மரங்களில் சிறந்த பூக்கள் மணங் கமழ்கின்றன. காஞ்சி, செருந்தி ஆகிய மரங்களில் பூக்கள் மலர்ந்து தேன் வழிகின்றது.

புள்ளிகளையுடைய வண்டுகள் மொட்டுகளைக் குடைந்து தேன் பருகி நிறைவுறுகின்றன. புன்னை மரங்கள் இதழ் விரிந்து மலரும் சிறந்த பூக்களைத் தாங்கி நிற்கின்றன. நரந்தம்புல் மணங்கமழ்கின்றது. நறவங்கொடிகள் பூந்தாதினைச் சிதறுகின்றன. அருங்கலைகளைக் கற்று வல்லார்க்குப் பொன் வழங்கும் கலைச்சுவையாளனைப் போல் கோங்கு மரங்கள் பொன்னிறத் துகளை உகுக்கும் பூக்களொடு விளங்குகின்றன. கருமையான அடிப்பகுதியையுடைய நுணா மரங்கள் அழகிய மலர்களைத் தூவுகின்றன. பருத்த அடிப்பாகத்தைக் கொண்ட வேப்பமரங்களில் வெண்ணிறப் பூங்கொத்துகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன.

கூர்மையான இலைகளைக் கொண்ட மூங்கில்கள் எண்ணற்ற பூக்களைத் தம்மிடத்தே நிரப்பி வைத்துள்ளன. குளிர்ச்சி பொருந்திய பூங்கொத்துகளைக் கொண்ட சந்தனமரங்கள் தழையால் பொலிவு பெற்றிருக்கின்றது. பூக்கள் நிறைந்திருக்கும் பிண்டி மரங்களில் தேன் வண்டுகள் முரலுகின்றன. பலா மரங்கள் பூம்பிஞ்சுகளை உதிர்க்கின்றன. பாதிரி மரங்கள் செழிப்புற்று விளங்குகின்றன. பொன்னிறத் தளிரையுடைய வேங்கை மரங்கள் புதிய கிளைகளைப் பெறுகின்றன. கொன்றை மரங்களில் முல்லைக் கொடிகள் இவர்ந்து தழுவி நிற்கின்றன. இலுப்பை மரங்களில் மலர் மொட்டுகளைச் சூழ்ந்து கரிய வண்டுகள் ஒலிக்கின்றன. இலவமரங்களின் நீண்ட கிளைகளில் தீப் போலுஞ் செந்நிறப் பூக்கள் ஒளிர்கின்றன. முண் முருக்க மரங்களின் மலரிதழ்களில் தேன் ததும்புகின்றது. காற்றிற் பறக்கும் மகிழம்பூக்கள் வானவெளியிலும் மணம் பரப்புகின்றன.

தும்பிக்கையைப் பெற்றுள்ள வண்டுகள் நல்ல மலர்களில் கள்ளையுண்டு மயங்கி அம் மலரிதழ்களில் தம் இணையொடு கூடிக் கிடக்கின்றன. மாமரத்தின்கண் கனியைக் கொத்தியுண்ட கரிய பெண்குயிலைக் கோங்குமரத்தில் தங்கியிருந்த அதன் ஆண் குயில் வந்து குறுகிய சிறகால் அணைத்துக்கொள்கின்றது. மூங்கிலின் கொழுமையான இளங்குருத்தினைக் கடித்துத் தின்று பச்சைக் கிளிப்பேடு செல்ல, அதனை எதிர்கொண்ட அதன் ஒப்பற்ற இணையான ஆண்கிளி அதன் செந்நிற வாயில் தன் வாய் முத்திப் பருவத்தின் புதுமணத்தில் தோய்ந்திருக்கின்றது. கரிய உடலையும் பொலிவான வாயையும் அழகிய இறகையுங் கொண்ட நாகண வாய்ப்புள் துயில்கொள்வது போல் அமர்ந்திருக்கும் புன்னை மரத்தின் கிளையைப் பொழிலகத்தே தென்றல் தவழ்ந்து அசைத்து ஆட்டிவிடுகின்றது

செண்பக மரத்தை மணங்கமழும் அதன் மலர் மொட்டுகள் இதழால் போர்த்து மறைந்துக் கொண்டுள்ளன. மணம் நிறைந்த கோங்கு மரத்தின் இலைகள் அடர்ந்த நிழலில் அன்பிற் சிறந்த அன்றிற் பறவைகள் மருவி மகிழ்கின்றன.

சோலையில் உள்ள தாமரைக் குளத்தில் நீராடிய, அழகிய தேமல் படர்ந்த மென்மையான தோளையுடைய மகளிர் முரலுகின்ற வண்டுகளை விரட்டிவிட்டுப் பிண்டியின் மலர்களை மாலையாகத் தொடுத்துத் தமது கரிய கூந்தலில் அணிந்துகொண்டு களிப்புமிக்க மயில்கள்போலக் காட்சியளிக்கின்றனர்; தம் பூப்போலும் மெல்லிய உடலில் பொன்னிற ஆடையை உடுத்திக் கொள்கின்றனர். மின்னல் போன்று ஒளிவீசும் அணிகலன்களோடு முன்னை முன்பனிப் பருவத்தே கழற்றிவைத்த முத்து மாலையையும், நூன் முறைகளை யுணர்ந்த கம்பியனாற் செதுக்கப்பெற்றதும் கனைக்கின்ற ஒலியை எழுப்புவதுமாகிய சிலம்பையும் அழகிய மேகலையையும் பூண்டும் கண்களுக்கு மை தீட்டிக்கொண்டும் பொலிவுற விளங்குகின்றனர்.

சோலையின்கண் குளிர்ச்சி பொருந்திய நீரையுடைய வாவியின் சிறிய கரையோரத்தில் மாலைப் பொழுதின் தென்றலை நுகர்ந்து மக்கள் இன்புறுகின்றனர். மணம் நிகழாமையால் வருந்துங் கன்னிப் பெண்களின் துன்பம் நீங்குமாறு அவர்கட்குத் திருமணம் நடைபெறுகின்றது. புதுமணம் புரிந்துகொண்ட ஆடவர்கள் தம் மனைவியரின் மலர்முகங் காணுதலைத் தவிர்க்க இயலாமல், தாம் மேற்கொள்ளவிருந்த அயலூர்ச் செலவைக் கைவிடுகின்றனர். வினை மேற்கொண்டு கூதிர் காலத்தே பிரிந்து சென்ற கணவன்மார், அவ் வினை பாதியளவே நிறைவேறிய நிலையில் மீண்டுவந்து தம் மனைவியரை அணுகுகின்றனர்.

குன்றவர்கள் காட்டகத்து உணவுப் பொருள்களைச் சமைத்துச் சோலையின்கண் கூட்டாஞ்சோறு உண்டு மகிழ்கின்றனர்.

திரண்ட அழகுபொருந்திய மதியொளியுந் தென்றற் காற்றும், கற்பொழுக்கத்திற் சிறந்த மகளிர்தம் உடலிலும் உள்ளத்திலுங் கிளர்ச்சி யூட்டுதலால், தம் செழிப்பான மார்பகந்தே குளிர்ச்சி பொருந்திய, மணங் கமழுஞ் சந்தனச் சாந்தையுஞ் செஞ்சாந்தின் கலவையையுங் குழைபடப் பூசிக்கொண்டும் இலைகள் நிறைந்த மல்லிகைக் கொடியினின்றுங் கொய்த பூக்களைக் கூந்தலிற் சூடிக்கொண்டும், தாம் திருமணம் பூண்ட முதல் நாளில் கணவனொடு மருவிய நுகர்ச்சியை மனத்தில் நினைந்துக் கொண்டும் முற்றத்தே நிலவொளி வீசும் படுக்கையின்கண்

துயிலுகின்ற இமையொடும் விழித்திருக்கும் மனத்தொடும் படுத்திருக்கும் உயர்ந்த தோளையுடைய தம் கணவன்மார் பக்கத்தில் அமர்ந்து அன்பொடு இன்மொழி பேசித் தம் கரிய கண்கள் சோர்வுறுமாறு இன்புற்றிருக்கின்றனர்.

இயற்கையின் அழகையெல்லாம் தம் தூவலில் பொருத்திப் பயிற்சி மிக்க தம் கையாலே பாடல்புனையும் திறமிக்க பாவலர்கள், மாலை நேரத்தே வானத்தின்கண் நிறைந்திருக்கும் மிகுந்த அழகிலும், பொழிலகத்தே தென்றலாற் கண்ணயர்ந்து கண்ட கனவிலும் குளிர்ச்சி பொருந்திய பொய்கையின்கண் தாமரையகத்துத் தேனை யுண்டு பண்மிழற்றும் வெண்மையான புள்ளிகளையுடைய வண்டின் நெறி பிறழாத சுழற்சியிலும், ஆயர்கள் புல்லாங் குழலினின்றும் எழுப்புகின்ற இனிய இசையிலும் தோய்ந்திருக்கும் தம் உயிரை மீட்க இயலாதவராய் ஆழ்ந்திருக்கின்றனர்.

மரக்கிளைகளில் மலர்ந்திருக்கும் பல்வகைப் பூக்களிலும் நீரிலும் நிலத்திலும் படர்ந்தும் இவர்ந்தும் உள்ள கொடிகளில் பூத்திருக்கும் பூ வகைகளிலும், திரண்டிருக்கும் முகில் தொகுதிகள் கொள்ளும் வண்ணங்களிலும் செறிவான புதர்களிலும், அகவல் ஒலியெழுப்பும் மயில்களின் தோற்றத்திலும், பிளவுகளைக் கொண்ட மலைகளிலும், அருவி நீரிலும் உயிருணர்வைச் செலுத்தி மற்றைய நினைவுகளை மறந்துவிடுகின்ற ஓவியக் கலைஞர்கள் உலா வருகின்றனர்.

இவ்வாறு அழகுமிக்க சிறப்புவாய்ந்த இனிய இளவேனிற் காலம் வந்துற்றது!

பழிக்கப்படாத சிறப்புடைய இளவேனில் வரவே, உயிரினங்கள் நன்கு செயல்படுகின்றன. பழைமைகளெல்லாம் விரைந்து விடுபடுகின்றன. சோர்வு நீங்கியதும் புதுமைகளெல்லாம் பெரிதும் எழுச்சியுறுகின்றன. உடலைக் குடைவது போல் குளிர் தாக்குகின்ற பனிக்காலம் நீங்கி, தீப்போல் வெப்பந்தாக்கும் முதுவேனிற்காலம் வருதற்கு முன்னர், இடையிலே இனிய இளவேனிற்காலம் வந்துற்றது!

திருவனப்பு ஒன்றிய திங்களுந் தென்றலும்

பின்பனி மீனம் பின்செல யாண்டும்
இன்னிளந் தென்றல் பூமணந் தணைக்கும்

மேழ மாதச் சிறுவெயிற் பொழுதில்
வாழப் புத்துயிர் வழங்கியோர் முன்னம்

பொங்கு மின்முகப் புலவற் போலவே
கொங்கவிழ் தாமரை குவிமலர் அவிழ,

ஆம்பல் மலர, அணியிதழ்க் குவளைக்
கூம்புமுகை விரிய, கொகுடி நகைப்ப,

உறுங்கொடி ஓடை ஒண்பூ மணப்ப,
நறுங்கொடி முல்லை நல்லிதழ் சிரிப்ப,

மாதவி விளங்க, மல்லிகை அலரக்
கோதவிழ் தாழைக் கொழுமல ரிலங்க,

வெள்ளிதழ் வெட்சி, விரிந்தெழில் நந்த,
புள்ளி வண்டினம் புதுத்தேன் மாந்த,

பொன்றளிர்த் தேமா பொலிந்தினி திருப்பப்
புன்குறு வனப்பின் பொரிப்பூ உதிர்ப்பச்

சிறியிலை ஞாழல் செறிந்துமணம் பரப்ப,
நறும்பூங் குரவம் நன்மலர் நாறக்

காஞ்சியும் செருந்தியும் கள்ளவிழ்ந் திழிதரப்
பூஞ்சினை குடைந்து பொறிஞிமி றார,

விரிந்தலர் புன்னை விழுமல ரேந்த,
நரந்தம் மணந்தர, நறவுதா தவிழ்ப்பக்

கற்றார்க் கீயும் கலைநுகர் வாளனாய்ப்
பொற்றா தூழ்த்திக் கோங்கிதழ் பொலியக்

கருங்கால் நுணவம் கவின்மல ரிறைப்ப
இருங்கால் வேம்பின் ஒண்பூத் தூங்க,

நுண்ணிலை வெதிரம் பன்மலர் நிரப்பத்
தண்ணிணர்ச் சாந்தம் தழைபொலிந் திருப்ப,

மலர்மலி செயலை மதுவண் டிமிரப்
பலவுவீ வுதிர்ப்ப, பாதிரி கஞலப்

பொன்றளிர் வேங்கை புதுச்சினை தழுவக்
கொன்றையின் முல்லைக் கொடிபுணர்ந் திருப்ப,

இருப்பைப் பூஞ்சினை இருள்வண் டிமிர,
நெருப்புறழ் இலவம் நெடுங்கோ டெரியக்

கான முருக்கங் கள்ளிதழ் குலுங்க,
[illegible] குலைக்கரு வகுளம் மணப்பக்

கைவாய் நறுமலர்க் கள்ளது மாந்தி,
மயலுற் றணியிதழ் மருவிக் கிடப்ப,

மாங்கோ துண்ட மையிருங் குயிலைக்
கோங்குவாழ் சேவல் குறுஞ்சிறை யணைப்ப,

மூங்கில் இளங்கெழு முளைகடித் துண்டு
நீங்குபைங் கிளியை நேர்முன் நிறுத்தி

ஒருநறுஞ் சேவல் ஒளிவாய்ப் பொருத்திப்
பருவப் புதுமணம் பயின்றினி திருப்ப,

மையுடற் பொன்வாய் மணிச்சிறைப் பூவை
பொய்த்துயில் கொள்ளும் புன்னையங் கோட்டைத்

தண்பொழில் தென்றல் தவழ்ந்துதா லாட்டச்
செண்பக நறுமலர்ச் சினையிதழ் போர்ப்ப,

மணங்கெழு ஞாழல் மலியிலை நிழலிற்
குணங்கெழு அன்றிற் கூடி யுவப்பப்

பொழிலகத் தாமரைப் பொய்கையி லாடி,
எழிலுறு சுணங்கின் இளந்தோட் பெண்டிர்,

ஆர்வண் டோச்சிச் செயலை தொடுத்துக்,
கார்குழல் மடுத்துக் களிமயி லொப்பப்

பொன்னிற வாடை பூவுட லணிந்து,
மின்னொளி ரணியொடு, முன்பனிப் பருவத்

துகுத்த முத்தத் தொளிமணி மாலையும்,
வகுத்த கைவரு வல்லான் செதுக்கிய,

கனைகுரற் சிலம்பும், கவின்மே கலையும்,
புனைந்துமை யெழுதிப் பொலிவுற் றிலங்கச்

சோலைத் தண்புனல் சிறுகரை மருங்கின்
மாலைத் தென்றலில் மாந்தர் களிப்புறப்

பயில்மணங் காணாப் பருவக் கோதையர்
உயவுநோ யொடுங்க உயர்மணம் பொருத்தப்

புதுமணப் பெண்டிர் பூமுகந் துறந்து,
வதுவை ஆடவர் வழிச்செல வழுங்கக்

கூதிர்ப் பிரிந்த கொண்க னாளரோர்
பாதிப் பணியொடு பாவையர் நெருங்கக்

காட்டூண் வகுத்துக் கடிமலர்க் காவிடைக்
கூட்டூண் அயின்று குறவர் உவப்பத்

திருவனப் பொன்றிய திங்களுந் தென்றலும்
ஒருமனப் பெண்டிர் உளத்துங் கிளர்தரப்

பொங்கு மார்பிடைப் பனிநறுஞ் சாந்துங்
குங்கும விரையும் குழையப் பூசி,

இலைமலி மல்லிகை இணர்குழல் பெய்து,
தலைநாள் முயக்கம் தாங்கிய உளத்தோ

டோங்கு முற்றத் தொளிநிலாச் சேக்கையுள்
தூங்கிமை விழிநெஞ்சத் தோளுயர் ஆடவர்,

மருங்கமர்ந் தன்பொடு மழலை பேசிக்
கருங்கண் சோர்வுறக் களிப்புற் றிருப்ப,

இயற்கை எழிலெலா மிறகில் ஏற்றிப்
பயிற்கை வனைவுறும் பாடல் வல்லுநர்,

மாலை வானத்து மண்டுபே ரழகிலும்,
சோலைத் தென்றல் சுழற்றிய கனவிலும்,

தண்சுனைத் தாமரைத் தாதுண் டிசைக்கும்
வெண்பொறி வண்டின் விலகா அசைவிலும்,

கோவலர் எழுப்பும் குழல்தீங் குரலினும்,
மேவிய உயரின் மீட்பிழந் திருப்ப,

கோட்டு மலரினும், கொடிப்பூ வகையினும்
கூட்ட முகிலினங் கொள்ளு நிறத்தினும்,

அடர்த்த புதரினும், அகவு மயிலினும்,
விடர்த்த மலையினும், வீழும் புனலினும்

ஆவியைச் செலுத்தி அயல்நினை விழக்கும்
ஓவிய வல்லுநர் உலாவர, வந்ததே

எழிலுறு சிறப்பின் இன்னிள வேனிலே!
இழிவறு சிறப்பின் இளவே னில்வர,

உயிர்கள் புணர்த்தன! உதிர்ந்தன பழமைகள்!
அயர்வு வீழ்ந்ததும் ஆர்த்தன புதுமைகள்!

குடைபனி ஒழிதர கொளுத்துங் கோடைக்
கிடைவந் தன்றே இன்னிள வேனிலே!

பாசம்

சொல் மூலம்:

பய்> பாய்> பாய் + அம்> பாயம்> பாசம்.

சொற்பொருள்கள்:

பாசம்: 1. அன்பு 2. பற்று 3. தளை
4. கயிறு 5. தையல் 6. சுற்றம்.

பய்: பசுமைக் கருத்து மூலவேர்.

(இப் "பய்" என்னும் மூலத்தின் வளர்ச்சிகளையும் விளர்ச்சி களையும் "பை" என்னும் உரைக்கட்டுள் கண்டு கொள்ளுக!)

பசுமைக் கருத்தின் கிளை வளர்ச்சியாக, ஒட்டுதல் கருத்து நிரம்பி, அதனின்றும் பலபடியான சொல்லாக்கங்கள் செழிப்பெய்தின. பசுமையும் ஈர்மையும் (ஈரத்தன்மையும்) உடைய ஒன்றே, ஒட்டுறவுக்கு இயல்வதாகையும், வறட்சியும் உலர்ச்சியும் உடைய ஒன்று, இயைவுக்கு இயலாததாகையும், – ஈண்டுக் கருத்தில் கொள்ள வேண்டிய உண்மைக ளாகும்.

பய் = பயின் > பசை, அரக்கு, பிசின்

(1-1) "பயினொடு சேர்த்திய கல்போல்" (அகம் : 256 : 9-10)

(1-2) "பல்கிழியும் பயினும்" (சீவக : 235)

(1-3) "பிசின் பயினொன்றே பேர்" (சூடா. 6 : 21 : 4)

பயின் = பாலேடு (திவாகரம்)

(துளு) Bine = Sticky, adhesive.

(கன்னடம்) Paginu = gum, resin.
(paginu> haginu)

Pagil = to be sticky, adhesive.

பய்> + இர்> பயிர்+பு> பயிர்ப்பு = பசை, பிசின்,
அழுந்த ஒட்டும் பசை.

(1-1) "பலவின் பயிர்ப்புறு தீங்கனி" (கலி : 50 : 12)

(1-2) "பயிர்ப்புறு பலவின் எதிர்சுளை அளைஇ"
(அகம். நித்தி. 308.4)

பயிர்ப்பு = பிற ஆடவர் மேனி, தன் மேற்படுங்கால், பெண்டிர்க்கு இயல்பாகவே மனத்துள் தோன்றும் அருவருப்புணர்வு; அருவருப்பு. (திவா), மகடூஉக் குணம் நான்கனுள் ஒன்று.

சொல்லாய்வு அறிஞர் அருளியார்

பய்> பயி> பசி = உணவின்மையால் வயிறு ஒட்டு நிலை, அதனைத் தீர்க்க வேட்கையுறும் உணர்ச்சி.

"பசியட நிற்றல் பசலை பாய்தல்" (தொல் : 6 : 22 : 3)

'பயி' என்னும் பழந்தமிழ் வடிவம், மலையாளத்தில் பசிய வடிவங்களில் பரக்கக் கிடக்கின்றது.

(மலை.) பயி, பய், பய்க்கம், பயிப்பு = பசி

(கன்னடம்) பசி = பசி (தெலுங்கு) பஸ்து.

பயிர் + கை > பயிர்கை = பறவை விலங்கு முதலியன தமக்கு உடல் வேட்கை எழும்போது, தம் எதிர்பால் இன வுயிரை விளித்தழைக்க வெளிப்படுத்தும் ஓசை, குரல்.

பய்> + இர்> பயிர் + தல்> பயிர்தல்

(1-1) "வீழ்துணை பயிரும் கையறு முரல்குரல்" (நற் : 71 : 9)

(1-2) "புணர்துணை பயிர் தல் ஆனா பைதலங் குருகே" (நற் : 3 : 88 : 12)

பய் + இல்> பயில் = ஒட்டு, நெருங்கு

"மஞ்ஞை ஆலும் மரம்பயில் இறும்பின்" (பெரும்பாண் : 395)

பயில் + தல்> பயிறல் = நெருங்குதல், ஒன்றுதல், ஒன்றிப் பழகுகை.

ஒ. நோ: "மெய் தொட்டுப் பயிறல்" (தொல். பொருள்: 3 : 11 : 1)

பயில் + சி> பயிற்சி = பழகிப் பெறும் கல்வி, பழக்கத் தொடர்ச்சி.

பய்> பயை> பசை = ஒட்டுதற்குரிய பொருள், கஞ்சி, கூழ்ப்பொருள்.

ஒ.நோ: நய்> நயை> நசை. இய்> இயை> இசை.

(துளு): பச = பசை. (மலை)பச்சு, பச, பய = பசை

"சிலம்பு அமை பத்தல் பசையொடு சேர்த்தி' (மலைபடு : 26)

(இம் மேற்கண்ட இலக்கிய வரியுள் பற்றியிருக்கும் பசையென்னும் சொல்லுக்கு நச்சினார்க்கினியர், "பற்று" என்று பொருள் குறிப்பார்.)

(உணவு சமைத்த கலத்தின் அடிப்புறத்தில் படிந்து ஒட்டிப் போயிருக்கும் தவசப் பசையைப் "பற்று" (பத்து) என்னும் சொல்லால் ஊர்ப்புறமக்கள் சுட்டுவர்.)

பசை = ஒட்டும் பசைபோன்றிருக்கும் கஞ்சி.

"நலத்தகைப் புலைத்தி பசைதோய்த் தெடுத்து" (குறுந் : 330 : 1)

பசை = ஒட்டு, ஒட்டிக்கொள், பற்றிக்கொள்

"அசைஇய பொழுதில் பசைஇ வந்து" (அகம் : 379 : 21)
(பசைஇ வந்து = பற்றிக் கொண்டு வந்து)

பசை = பற்று, உள்ளப்பற்று, உள்ள ஒட்டுறவு, அன்பு

பசை = விழைவு.

"பசைஇய பசந்தன்று நுதலே" (குறுந் : 87 : 4)

(நுதல் பசைஇய பசந்தன்று = நெற்றி, அவர் எம்மை விழைதல் வேண்டிப் பசந்து காட்டுவதாயிற்று)

பசை + தல்> பசைதல் = விரும்புதல்

"நோக்கிப் பசைதல் பரியாதாம் மேல்" (நாலடி : 60 : 3-4)

பசைதல் = நட்புக் கொண்டிருத்தல்
"பசைந்த துணையும் பரிவு ஆம்" (நாலடி : 187 : 1-2)

பசை = அன்பு நெகிழ்வு.

"அசையியற்கு உண்டு ஆண்டுஓர் ஏஎர் யான்நோக்கப்
பசையினள் பைய நகும்" (குறள் : 1098)

பய்> பாய்> பாய் + அம்> பாயம் = விருப்பம், விழைவு, அன்பு,
புணர்ச்சி விருப்பம்.

பாயம் : விருப்பம்.

"பளிங்கு சொரிவு அன்ன பாய்சுனை குடைவுழி
நளிபடு சிலம்பில் பாயம் பாடி" (குறிஞ்சிப் : 57-58)

(நச். உரை: பாயம் பாடி = மனத்துக்கு விருப்பமானவற்றைப்பாடி.....)

பாயம் = புணர்ச்சி விருப்பம்.

"ஈர்ஞ்சேறு ஆடிய இரும்பல் குட்டிப்
பன்மயிர்ப் பிணவொடு பாயம் போகாது"
(பெரும்பாண் : 341-342)

(நச். உரை: ஈரத்தையுடைய சேற்றை அளைந்த, கரிய பலவாகிய குட்டிகளையுடைய, பலவாகிய மயிர்களையுடைய பெண்பன்றிகளுடனே, புணர்ச்சியைக் கருதும் கருத்தாற் போகாமல்...)

பாயம்> பாசம் = அன்பு, வேட்கை, உறவன்பு

ஒ.நோ: தேயம் > தேசம். நேயம் > நேசம்
ஈயல் > ஈசல் நெயவு > நெசவு.

பாசம் = அன்பு

"பாசமாகிய பந்து கொண்டாடுநர்" (சீவக : 1320)

பாசம் = பற்று. "மனைப்பாசம் கைவிடாய்" (நாலடி : 130)

பாசம் = பற்றிமை. "பாசம் பரஞ்சோதிக் கென்பாய்" (திருவாச: 7 : 2)

தன்னைப் பொருந்திய அன்புடைய சுற்றத்தினர், "பாசம்" என்ற சொல்லாலேயே குறிக்கப் பெற்றனர். (பாசம் = சுற்றம்)

"ஆசை பிறன்கண் படுதலும், பாசம்
பசிப்ப மடியைக் கொளலும்" (திரிகடு : 20)

அன்பையும் விழைவையும் வேட்கையையும் குறித்தவாறு வளர்ந்து பயிலப்பெற்றதாகிய, "பாசம்" என்னும் சொல் தமிழ்மொழியில் மட்டுமே தோன்றிய ஒன்றாகும். தொடர்ந்த பரவலான வழக்காற்றிலும் உள்ளதாகும்.

இம் மேற்கண்ட பொருள்களையுடைய "பாசம்" என்னும் தூய செந்தமிழ்ச்சொல், சமற்கிருதத்தில் அறவேயில்லை. தமிழ்மொழிப் புலவர்கட்கும் பொது மக்கட்கும் உற்ற வடமொழி மயக்கமும், தன்னுணர்வின்மையும், அச்சொல்லை வடமொழியென்றே பிழைத் தெண்ணிப் பயின்று வருமாறு நேர்வித்துள்ளன.

"பய்" என்னும் ஒட்டுதல், ஒன்றுதல் கருத்து மூல வழியாகப், பிணித்தல் கருத்தும், கட்டுகைக் கருத்தும் விளர்ந்தன.

பய்> பாய்> பாய் + அம்> பாயம்> பாசம்:

"பாசம்" என்பது, ஒன்றைப் பற்றிப் பிணிப்பதாகிய கயிற்றுக்கும் ஆகிவந்தது.

பாசம் = கயிறு.

"விளம்பழம் கமழும் கமஞ்சூற் குழிசிப்
பாசம் தின்ற தேய்கால் மத்தம்" (நற் : 12 : 1-2).

(உரை : கயிறு ஆடித் தேய்த்தலாலே தேய்ந்த தண்டினை உடைய பெருமத்து...)

பாசத்தளை = பற்றிப் பிணிக்கும் தளைக் கயிறு.

"பற்று என்னும் பாசத் தளையும், பலவழியும்
பற்று அறாதுஓடும் அவாத் தேரும்" (திரிகடு : **22 : 1-2**)

உயிர் என்று, ஏதோ ஒரு அருவ ஆற்றல்,– உடலுள் ஒளிந்திருக்கின்றது என்றும், காலங்குறித்து ஒருவன் தன் கையில் வைத்திருக்கும் கயிற்றால் அவ்வுயிரைக் கட்டிப் பிணித்துக் கவர்ந்து போகின்றான் என்றும்,– ஒரு கற்பனையான மூடக் கருத்து, இங்கு நிலவியிருந்தது.

(யாமம் = நள்ளிருள், நள்ளிருள் நேரம். யாமன்> யமன்= நள்ளிருள் நேரத்துள் வந்து உயிரைக் கவர்ந்து போகின்றவன். (ஒரு கற்பனை இல்லுருவோன்.)

(யமன் > எமன்). (யமன் > நமன்).

(கால் = பொழுது, நேரம். கால் + அம் > காலம் = பொழுது. கால் + அன்> காலன் = பொழுது அறிந்து வந்து உயிரைக் கவர்ந்து போகின்றவன். (பகுத்தறிவற்ற பேதையர் ஆக்கிய தமிழ்ச்சொல்.)

அக் கற்பனையுருவோன் கையகத்திருப்பதாகக் கருதப்பெற்ற கயிறு, "பாசம்" என்னும் கிளைப் பொருண்மைச் சொல்லோடு பிணிக்கப்பெற்று, ஓர் இருபெயரொட்டுச் சொல்லாகப் "பாசக்கயிறு" என்றும் பயிலப் பெற்றது.

அச்சவுணர்ச்சியால் பேதையர் உள்ளத்தே தோன்றிய "பேய்" என்னும் ஒரு கற்பனையுருவும், உயிரைக் கயிற்றில் பிணித்துக் கவர்ந்து செல்கின்றதென்று, மடத்தனமாகக் கருதி,– கயிற்றை வைத்திருப்பது என்ற அடிப்படையில், "பாசம்" என்ற சொல்லாலேயே அப் பேயும் குறிக்கப் பெற்றது.

(பாசம் = பேய்)

ஒ. நோ: "பலிகொண்டு பெயரும் "பாசம்" போல"
(பதிற் : **71 : 23**)

பாசம் = பாசக் கயிறு

(1-1) "கைக் கொள் பாசத்துக் கைப்படுவோர்" (சிலம்பு: **5 : 132**)

(1-2) "கறைகெழு பாசத்துக் கையகப் படுதலும்
பட்டோன் றவ்வை படுதுயர் கண்டு
கட்டிய பாசத்துக் கடிதுசென்றெய்தி" (சிலம்பு : 15 : 79)

(1-3) "கட்டா துன்னையென் கடுந்தொழிற் பாசம்"
(மணி : 22 : 71)

பிணிக்கும் கயிற்றைக் குறித்த "பாசம்" என்னும் சொல், சமற்கிருதத்தில் "Pāsa" எனத் திரிந்தது. "பாசம்" என்ற செப்பவடிவம் அம்மொழிக்கண் இல்லை.

சமற்கிருத அகராதிகளில், 'Pāsa' என்ற சொல்லுக்கு,– வலை, கண்ணி, சுருக்கு, கயிறு, தொடரி, அதனைக் கட்டுவிப்பது என்றவாறான பொருள்களைப் பரக்கப் பட்டியலிட்டுள்ளனர்.

அச்சொல்லுக்கு நேரே,- அன்பு, விழைவு, விருப்பம், அன்புறவு, என்றவாறு, தமிழ்ச்சொல்லாகிய பாசத்துக்குரிய ஒருபுடைப் பரவலான செழும் பொருள்களில் ஒன்றுதானும் குறிக்கப் பெறவேயில்லை.

பிணித்துத் தளைக்கும் கயிறாகிய "பாசம்" என்னும் தமிழ்ச் சொல்லின், திரிபுகளை, அதன்வழி வடபாலியர் வளர்த்துக்கொண்ட கிளைக் கருத்துகளுடன் கீழ்வரும் பட்டியலில் காணலாகும்.

பாசம்> (Sanskrit) Pāsa = noose,
Pāsaka (Lex), Pāsi = rope (கயிறு)
Pasika = leather strap on plough

Pali: Pāsa = tie Pāsiya = little do.
Katei: Pōs = trap. (கண்ணி)
Khohistāni: Pas = noose (சுருக்கு, முடிச்சு)
Nepali: Pasō = net
Bengāli: Pās = noose
Mythili: Pās = net (வலை)
Kes-Pās = lock of hair
Hindi: Pās, Pāsā = noose.
Old Gujarāti: Pāsu = noose.
Konkani: Pāsu
Sinhalese: Pasa = net.
Oriya: Pāsa = net

இருப்பு: மொழியியல் உரைகள்
(2-ஆம் தொகுதி)

இளவேனிலும் இலக்கியமும்

காலங்களிற் சிறந்ததாக இளவேனிற் காலம் (வசந்த காலம்) பாராட்டப்படுவதற்குரிய அதன் தனிச் சிறப்பு என்ன?

— **கல்விச்செல்வன்,** சென்னை - 50.

◆ *தொடர்மழையுங் கூதற்காற்றும் பனிக்குளிருங் கொண்ட கார் முதலான முன்னைப் பருவங்களையும், கடுவெயிலும் வறளைக் காற்றும் நீரருமையுங் கொண்ட பின்னை முதுவேனிற் பருவத்தையும் போல் அல்லாமல் இனிய தென்றலை நுகர வாய்ப்பானதும் நீராடி மகிழவும் நிலாப்பயன் துய்க்கவும் ஏற்பானதும் இளவேனிற் பருவமே.*

அறுவடை யுள்ளிட்ட பயிர்த்தொழில் வேலைகள் முடிந்து, அடுத்த வேளாண்மை ஆண்டிற்குரிய வேலைகள் தொடங்கு வதற்கு முந்திய - இடைப்பட்ட காலமாதலால், வேலைச்சுமை குறைந்து விழாக் கொண்டாடுதற்கும் நாடகம் முதலான கலை நிகழ்ச்சிகளைக் கண்டுங் கேட்டுஞ் சுவைத்து இன்புறுதற்கும் இளவேனிலே இசைவானது. கனிகளுட் சிறந்தன வென்னும் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகளும் மலிந்திருப்பதும் இன்ன பிறவுங் கொள்க!

"வெயில்நாளின் பகற் பொழுது தண்ணீரில் தலைமுழுகுவதற்கு இனிதாயிருக்கின்றது! பாதிரி மலர் முகிழ்களில் அளைந்து அவற்றின் நறுமணத்தைக் கொள்ளைகொண்டு கானகக் காற்று மெல்லென வீசுதலால், இந்தப் பகற்பொழுது அடர்ந்த மரநிழல்களில் அயர்ந்த துயிலை எளிதில் வருவிக்கின்றது; மாலைக் காலம் மிகவும் இனிதாயிருக்கின்றது!'" என இளவேனிற்காலம் இன்பந் துய்த்தற்கு ஏற்றதாய்த் தோன்றியது பற்றிக் கூறப்பட்டுள்ளதுங் காண்க.

இனி, பாவலரேறு ஐயா அவர்கள் இயற்றியுள்ள அறுபருவத் திருக்கூத்தினுள், இளவேனிற் காலத்தின் எழிநலங்களை யெல்லாம் ஒழுங்கு திரட்டி எழுதியுள்ள பகுதி இவ்விதழின் முந்திய பக்கங்களில் இடம் பெற்றிருத்தல் காண்க!

"தமிழில் இயம் என்று ஓர் இறுதிநிலை (விகுதி) இல்லை' என்றும், 'இலக்கியம் என்பது 'லஷ்ய' என்னும் வட சொல்லின் திரிபே' என்றும், "தொல்காப்பியர் இலக்கியத்தைச் செய்யுள் என்கிறார்" என்றும் முனைவர் இரா. திருமுருகனார் கூறியுள்ளாரே, அதுபற்றி என்ன கருதுகிறீர்கள்?

—**சீ. அறிவுடைநம்பி,** சென்னை - 19.

◆ *வினைச் சொற்களின் உறுப்புகள் போலப் பெயர்ச் சொற்களின் இறுதிநிலைகள் முன்னை இலக்கண நூலாரால் தெளிவாகத்*

தொகைவகைப் படுத்தி வரையறுக்கப்படவில்லை. உரையாசிரியர்கள் காட்டியிருப்பனவற்றுள் மாற்றத் துக்குரியனவும், அவையிற்றின் அடங்காதனவும் பலவுள.

ஊது + இயம் = ஊதியம் (லாபம்), உழை + இயம் = ஊழியம் (தொண்டு. உழையோர் – ஏவலர்) கம் + இயம் = கம்மியம் (கைத்தொழில்), கல் + இயம் = கல்லியம் (கட்டை), கொள் + இயம் = கொள்ளியம் (ஒரு செடி) தண்டு + இயம் = தண்டியம் (புறக் கூரை தாங்குங் கட்டை), துல் + இயம் = துல்லியம் (தூய்மை), பண் + இயம் = பண்ணியம் (தின்பண்டம்), வல் + இயம் = வல்லியம் (இடையரூர்), வள் + இயம் = வள்ளியம் (மரக்கலம்) என்னுந் தூய தமிழ்ச்சொற்கள் இயம் என்னும் இறுதிநிலை கொண்டுள்ளமை தெளிவாக அறியப்படுகின்றது. அன்றியும் கண்ணியம், மானியம் முதலியனவாக வடமொழியில் வழக்கூன்றியுள்ள பற்பல சொற்கள் தமிழ்ச்சொற்களே என்பதையும் அறியலாம்.

மேலும், வடநூலார் இலக்கியத்தைச் 'சாகித்தியம்' என்பதன்றி லக்ஷ்யம் என்று சொல்வதில்லை.

ஆகவே, இலக்கியம் தமிழ்ச்சொல் என்று கொள்வது பொருந்துவதே. வடமொழியிலுள்ள 'லக்ஷ்ய' (குறி) என்பது இலக்கு (இலக்கம்) என்னும் தமிழ்ச் சொல்லின் திரிபே என்பதும் மொழிநூன் முதறிஞர் துணிபு.

தொல்காப்பியத்துள் செய்யுள் என்னுஞ் சொல் இலக்கியத்தைக் குறிப்பதால், இலக்கியம் வடசொலின் திரிபு என்றாகி விடாது.

'தமிழில் திருக்கோயில் வழிபாடு' என்பது ஆரியப் பார்ப்பனிய இந்துமதக் கட்டமைப்பிலிருந்து தமிழ் மக்களை எவ்வாறு விடுவிக்கும்?

— பெருமாள், சென்னை-28.

தமிழர்தம் கோயில்வழிபாட்டு நெறி ஆரிய வேதமதத்தாற் பிணிக்கப்பட்டு இன்று இந்துமதமாகத் தோற்றமளிக்கிறது. வேதமதத்தில் பிறவிக்குலக் கோட்பாடாகிய நால்வரணப் பாகுபாடும் அவற்றுக்கு அடிப்படையான வேதங்கள் மிருதிகள் முதலியனவும் அவற்றைத் தாங்கி நிற்கும் சமற்கிருத வல்லாண்மையுமே இந்துமதமாக பேருருவங் கொண்டுள்ளது. தமிழர்கள், சமற்கிருதத்தை முன்னிறுத்தும் பார்ப்பனிய ஆளுமையின் மூலமே வீழ்த்தப்பட்டனர். தேவமொழி என்று பரப்பப்பட்ட அம்மொழி வழியான ஆளுமை இன்று வரையிலும் பல்வேறு வகையில் தமிழரைத் தலைநிமிரவொட்டாமல் செய்து கொண்டிருக்கிறது. எனவே சமற்கிருத மந்திர வழிபாட்டை ஒழித்துக் கோயில்களில் தமிழ்வழிபாட்டை மீட்பது இந்துமதக் கட்டமைப்பை உடைத்துத் தமிழரை அதனின்று விடுவிக்கும் தொடக்க நிலை முயற்சியே!

— இறை

தமிழ்த் தேசியமும் சாதிய ஒடுக்குமுறையும்!

— கரடிப்பட்டி. கண்ணன் —

இந்தியத் தேசிய அரசு ஆளுமைக்குள், தாங்கள் ஒடுக்குண்டிருப்பதாக இன்று வெவ்வேறு மொழிவழித் தேசிய இனத்தினரும் முரண்பட்ட நிலையில், கருத்தியல் அளவிலோ, அல்லது கருவியியல் அளவிலோ போராடிக் கொண்டிருக்கின்றனர். ஒரு சிறு குழுவாகவுள்ள ஆரியப் பார்ப்பனர்களின் ஆளுமைத் தன்மை யையும், பெருங் குழுவாகவுள்ள தேசிய இன மக்கள் ஒரு குவி முனையில் இணைய முடியாததற்கான கரணியங்களையும், ஒவ்வொரு தேசிய இனமக்களும் தங்களின் தொடர்ந்த போராட்டங் களின் வரலாற்றிலிருந்தே பட்டறிவைப் பெறமுடியும். அவ்வகையில் தமிழ்த் தேசிய இனம் இரண்டு வகையான ஒடுக்கு முறையை எதிர் கொள்வதை நாம் நடைமுறையில் பார்க்கலாம்.

பல மொழிவழித் தேசிய இனங்களை, ஒரு மதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டோ, அல்லது ஒரு பொருளியல் கோட் பாட்டை அடிப்படையாகக் கொண்டோ ஒரே அரசமைப்பிற்குள் நீண்ட நாள் ஆள முடியாது. கிருத்துவ மதத்தை அடிப்படையாகக் கொண்ட ஐரோப்பிய நாடுகள் பல மொழித் தேசிய நாடுகளாகப் பிரிந்ததும், இசுலாம் மதத்தைப் பின்பற்றுகின்ற பாக்கித்தான், ஆபுகானித்தான் நாடுகளின் இனவியல் போராட்டங்களும், சோவியத்து ஒன்றியச் சிதைவும் இதற்கு நடைமுறை எடுத்துக் காட்டுகளாகும். அவ்வாறே ஆரியப் பார்ப்பனிய இந்துமதக் கோட் பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, பலமொழித் தேசிய இனங்களை அடக்கி ஆளுகின்ற, இந்தியத் தேசிய ஆளுமையை எதிர்த்துப் பல மொழித் தேசிய இனங்கள் போராடுவதைப் போல், நம் தமிழ்த் தேசிய இனமும் போராடுவது அடிப்படை உரிமை யாகும்; குமுகாய அறிவியல் இயங்கியல் உண்மையுமாகும். தமிழ்த் தேசிய விடுதலையை முன்னெடுத்த திராவிட இயக்கத் தலைமைகள், இன்று இயங்கிக் கொண்டுள்ள சில தமிழ்த் தேசிய இயக்கங்கள் எல்லாம் ஓர் எல்லை வரையிலேயே செல்லமுடியும். ஆகவே, தமிழ்த் தேசிய முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு மக்கள் எந்தெந்த அடிப் படையில் ஒடுக்கப்பட்டு இருக்கின்றார்கள் என்பதையும், அதற்கான கரணியங்களையும் அவர்களின் விடுதலைக்கான போராட்ட முறைகளையும் படிப்படியாகப் பார்ப்போம்.

தமிழ்த் தேசிய ஒடுக்குமுறை:

இங்குள்ள குமுகப்படிநிலை அமைப்பிற்கேற்பத் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆளுமைச் சாதிய மக்கள் ஆரியப் பார்ப்பனிய இந்து மத ஆளுமைக்குள், சாதிய ஒடுக்குமுறையை வெவ்வேறு அளவிலான தன்மைகளில் உணர்ந்தாலும், மொழித் தேசிய ஒடுக்கு முறை எல்லோருக்கும் பொதுவாகவே இருக்கின்றது. ஆயினும், மொழித் தேசிய ஒடுக்குமுறையை மேல் சாதியத் தமிழர் கள் உணர்ந்த அளவு, மற்ற தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட தமிழர் கள் உணர முடியாத அளவிற்குச் சாதிய அழுத்தங்கள் தடுக்கின்றன. பொருள் உருவாக்கத்திற்கோ, பண்பாட்டு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட குமுக உறவிற்கோ மொழி இல்லாமல் குமுகாய இயக்கம் நடைபெற முடியாது. தமிழ்மக்கள் தம் தமிழ்மொழி உறவை அடிப்படையாகக் கொண்டே மற்ற உறவுகளை இணைக்கவும், இவற்றுக்கு எதிராகவுள்ள கூறுகளை விளக்கவும் முடியும்.

“இங்கிலாந்து நாட்டின் நிலப்பரப்பு முழுவதையும் இழந்தாலும், சேக்கசுபியரின் எழுத்துகளில் ஒரு வரியைக் கூட இழக்க நான் இசைய மாட்டேன்” — என்று அந்நாட்டின் தலைமை அமைச்சராக விருந்த வின்சுடன் சர்ச்சில் கூறினாராம். நிலத்தை வேற்று இன ஆளுமையரிடம் இழந்து விட்டாலும், தங்களின் மொழியைக் கொண்டு — இலக்கியத்தைக் கொண்டு மக்களுக்கு உணர்வூட்டி — ஒன்றிணைத்துத் தங்கள் நிலத்தை மீட்க முடியும். மொழியை இழந்து விட்டால் மக்களை ஒன்றிணைக்கவே முடியாது. “தமிழ் எங்கள் உயிர் என்பதாலே, வெல்லுந் தரமுண்டு தமிழருக்கு இப்புவிமேலே” — என்று நம் புரட்சிப் பாவலர் பாரதிதாசன் கூறுவதும் இவ் வுண்மையாலேயாகும். ஆகவே, தமிழகத்தில் வாழ்கின்ற மக்கள் தங்களின் தாய்மொழியாகிய தமிழ்மொழியை உயிரின் ஓர் கூறாகவே எண்ணவேண்டும். மேலும் மேல்சாதித் தமிழராயினும் தாழ்த்தப் பட்ட சாதித் தமிழராயினும் தங்களின் கருத்துகளை மக்களிடம் பரப்புவதற்குத் தங்களின் தாய்மொழியாகிய தமிழையே பயன்படுத்தியிருக்கின்றனர். அவ்வகையில், ‘அறிவுக்கடல்’ ‘பறையன்’, ‘ஒரு பைசாத் தமிழன்’ ‘தமிழ்நாடு’ போன்ற செய்தி இதழ்களை எடுத்துக் காட்டாகப் பார்க்கலாம்.

தமிழ்த் தேசிய இனத்தின் வளர்ச்சி வரலாறு பல கட்டங்களைக் கொண்டது. பல்வேறு சிற்றரசுகளாலும், சில பேரரசுகளாலும் ஆளப்பட்டு வந்த தமிழகம், ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பின்பே தெளிவான ஒரு தேசிய இன அடையாளத்தை உணருகின்ற சூழ்நிலைக்கு வருகின்றது. இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பரவியிருந்த தமிழ்மொழி, ஆரியரின் ஊடுருவலால் வட திராவிட,

தென் திராவிட மொழிகளாகத் திரிபடைந்து உருமாறிவிட்டன. இன்று மேலும் நம் தமிழ்மொழியும் இனமும் சிதைவடைவதற்குள் நம் உரிமைப் போராட்டத்தைத் தொடங்கியாக வேண்டும். தமிழகத்தை வெவ்வேறு இனங்களின் ஆளுமையர் ஆண்ட போதெல்லாம், அவர்களின் தாய்மொழியே இங்கு அரசு மொழியாக இருந்து, நம் தமிழ் மொழியை வளரவிடாமல் செய்திருக்கின்றன. இறுதியாக ஆரியச் சார்புடைய சமசுக்கிருதமும், இந்தியும் வல்லரசியச் சார்புடைய ஆங்கிலமும் நம்மை இன்று மொழிநிலையில் ஆளுமை செலுத்துகின்றன.

மொழி ஒடுக்குமுறையே மற்ற அனைத்து ஒடுக்குமுறைக்கும் சுரண்டலுக்கும் மூல கரணியமாக இருப்பதால், தமிழ்மொழியை முன்னிலைப்படுத்தாத எந்தக் கோட்பாடும் இங்கு தோல்வியில்தான் முடியும். நிலவுடைமைக் காலக் கட்டத்திலிருந்து முதலாளிய வளர்ச்சிக் கட்டத்திற்குச் செல்லும்போதுதான் பொருள் உருவாக்கத்திற்கும், அவற்றைச் சந்தைப்படுத்தலுக்கும், நுகர்வோரிடம் கொண்டு செல்வதற்குமான ஒரு தொடரில், மக்களின் உறவுக்கு தங்களின் தாய்மொழியாகிய தமிழ்மொழி எந்த அளவு பயன்படுகிறது என்பதை உணர முடிகின்றது. இந் நிகழ்ச்சிப் போக்கிலேயே மொழி வழியான இனவுணர்வும், நில வழியான நாட்டுணர்வும் பிறக்கின்றன. இன்று கல்வி மொழி, ஆட்சி மொழி, வழிபாட்டு மொழி அனைத்திலும் தமிழே இருக்க வேண்டுமென்று போராடுவதும், இவற்றுக்குத் தடையாக இந்திய தேசியமும், உலக வல்லரசியமும் இருப்பதையும் நாம் உணர்கின்றோம். இவை யெல்லாவற்றின் தொகுப்பாகவே தமிழ்த் தேசிய ஒடுக்குமுறையை நாம் ஒவ்வொருவரும் உணர வேண்டும்.

சாதிய ஒடுக்குமுறை:

இந்தியாவில் சாதிய ஒடுக்குமுறையை உணரும் போதும், ஆய்வு செய்யும்போதும், ஏணிப்படி நிலையில் வெவ்வேறு அடுக்குக ளாகவுள்ள சாதிய அமைப்பையும், இவையெல்லாவற்றையும் ஒன்றிணைத்து ஆளுமை செய்கின்ற ஆரியப் பார்ப்பனிய மதமாகிய இந்து மதத்தையும் எண்ணாமல் இருக்க முடியாது. மாந்தனின் பொருளியல் சார்ந்த இவ்வுலகியல் வாழ்க்கை மதக் கொள்கை யோடும், மதக் கொள்கை இறைமைக் கொள்கையோடும் பின்னிப் பிணைக்கப்பட்டு, ஒரு மீள முடியாத துயர நிலையிலேயே பெரும் பான்மையான மக்கள் அழுத்தப்பட்டுள்ளனர். இவ்வுலகில் உயிர் வாழ்வதற்கான உழைப்பிலும் பொருள் உருவாக்கத்திலும் நேரடி யாக ஈடுபடாத ஒரு சிறு குழுவைச் சேர்ந்தவர்கள் எல்லா நலன் களையும் துய்த்துக் கொண்டு, அவர்களுக்காக உழைத்துக் கொண்டிருப்பதே

பெரும்பான்மையான மக்களுக்கு அடுத்த பிறவி யில் இந் நலன்களை அடைவதற்கும் இறைவனை அடைவதற்குமான வழியாகும் என்று ஒரு கரவான கோட்பாட்டை உருவாக்கி நம் மக்களை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அடிமைப்படுத்தி வைத்துள்ளனர்.

இந்தச் சிறு குழுவைப் பெருங்குழு எதிர்க்க முடியாதபடிக்கு, ஒவ்வொரு சாதிக் குழுவும் இன்னொரு சாதிக் குழுவோடு இணைய முடியாமல் உயர்வு தாழ்வு கற்பித்து, ஒவ்வொரு குழுவும் ஒரு குறிப்பிட்ட தொழிலைத்தான் செய்ய வேண்டுமென்று கட்டாயப் படுத்தி, அது நீண்டகாலம் எவ்வகை மாற்றமுமின்றி அரசு அதிகாரத்தின் துணைகொண்டு நிறைவேற்றப்பட்டது.

“உண்மையில் **ஏற்றத் தாழ்வான குமுகம், படிநிலைச் சமன்மை யற்ற குமுகம்** ஆகிய இரண்டும் வெவ்வேறான அடிப்படைகள் கொண்டவை. இவற்றில் முன்னது வலிமையற்ற அமைப்பாகும். தன்னைத் தானே காத்துக் கொள்ளும் திறனற்றது. ஆனால், பின்னதோ தன்னைத் தானே காத்துக் கொள்ளும் திறனுடையது. ஏற்றத் தாழ்வான குமுக அமைப்பில் கீழ்நிலையில் உள்ளவர்கள் ஒன்றிணைந்து அந்த அமைப்பைத் தூக்கி எறிய முடியும். எந்த ஒரு பிரிவினருமே அந்த அமைப்பைக் கட்டிக் காக்கும் நாட்டமுடையவர்க ளாக இருக்க மாட்டார்கள். ஆனால் பன்மப்படி நிலையிலான சமன்மையற்ற குமுக அமைப்பில் தாக்கமுற்றவர்கள் ஒன்றிணைந்து பொதுத் தாக்குதல் நடத்துவதற்கான வாய்ப்பு இல்லை. இக் குமுக அமைப்பில் தாக்கமுற்றவர்கள் அனைவரும் சமமான தகுதியில் இல்லை. செல்வர்கள் — வறியவர்கள் என்ற இரண்டே பிரிவு உள்ள இடங்களில்தான் இது முடியும்”

(‘தீண்டத்தகாதாரும் இந்துக்களும்’ — அண்ணல் அம்பேற்கர்)

எண்ணற்ற சாதிக் குழுக்களை நான்கு வரணங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான ஒழுகலாறுகளையும் தொழிலை யும் வரையறுத்து, தலைமையில் ஆரியப் பார்ப்பனியமே ஆளுமை செய்தது. நாட்டை ஆண்ட அரசர்களும் ஆரியப்பார்ப்பனர் முன் மண்டியிட்ட வரலாறே இன்று வரையில் தொடர்கிறது. இவ் வுலகியல் தேவைகளை நிறைவேற்றுகின்ற உழைப்பில் பெரும் பங்கை செலுத்துகின்ற வேளாண்(சூத்திர)மக்களும், இந்த வரண வரம்புக்குள் வராத தாழ்த்தப்பட்ட மக்களுமே பெருஞ்சுமையைத் தாங்கினர். அதிலும் முழுமையாகப் பொதுவுரிமை மறுக்கப்பட்டவர்களான ஒடுக்கப்பட்ட மக்கள் மாந்தப் பிறவியராகவே எண்ணப்படாமல் விலங்கினும் கீழாக மிதிக்கப்பட்டனர். இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களின் பெரும்பகுதியான போராட்டங்கள் தங்களின் பொது வுரிமைக்கானவையாகவே இருந்திருக்கின்றன.

ஆரியப் பார்ப்பனிய ஆளுமைக் கொள்கையைக் கணக்கில் எடுக்காமல், பொருளியல் சார்ந்த வகுப்புப் போராட்டத்தை முன்னிலைப்படுத்தினால் சாதிவேறுபாடு ஒழிந்துவிடும் என்ற பார்ப்பனியச் சார்புடைய பொதுவுடைமைக் கட்சிகளின் தலைமை கள் 'வேதம்' ஓதிக்கொண்டிருப்பது அவர்களின் மேல் சாதிய வகுப்புணர்வின் தன்மையாலே யாகும். அவ்வாறே மொழிவழியான தேசிய ஒடுக்கு முறையிலும் கவனம் செலுத்தாமல், இந்தியாவை ஒரே நாடாகப் பார்ப்பது, தேசிய இனங்களின் விடுதலையில் தங்களின் ஆளுமைத் தன்மை அகற்றப்பட்டுவிடும் என்ற முன்னோக்கியப் பார்வையாலே யாகும்.

தமிழ்த் தேசிய ஒடுக்குமுறையும், சாதிய ஒடுக்குமுறையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைக்கப்பட்டு குமுகளவில் மாறுதலுக்கான சிந்தனையே இல்லாத இந்துமதக் கட்டமைப்பிற்குள் நாம் ஒடுக்கப்பட்டுள்ளோம். அரசுப் பதவிகளிலும் அரசியல் பதவி களிலும் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இட ஒதுக்கீடு கிடைத்தால் அவர்களின் வழியாக மற்ற மக்களுக்கும் விடுதலை கிடைக்கும் என்ற அண்ணல் அம்பேற்கர், தந்தை பெரியார் போன்றவர்களின் கனவு பொய்த்து விட்டதையே நாம் நடைமுறை யில் காணுகிறோம். சிலருக்குச் சில சலுகைகளை மட்டும் கொடுத்து இந்தச் சாதியக் கட்டமைப்பையும் பொருளியல் சுரண்டலையும் கட்டிக் காக்கவே இந்திய அரசு விரும்புகிறது.

இன்று தமிழ்நாட்டில் சாதியப் போராட்டங்களால் தாழ்த்தப் பட்ட மக்களுக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் பெருந்தாக்கம் ஏற்பட்டிருந்தாலும், குறிப்பிட்ட சில சாதிகளுக்குள்ளேயே போராட்டம் நடப்பதாக அரசும் சாதியத் தலைவர்களும் கூறுகின்றனர். மற்ற சாதி மக்களும் இதில் அதிகம் கவனம் செலுத்துவதில்லை. நம் மொழியைச் சேர்ந்தவர்கள், நம் இனத்தைச் சேர்ந்தவர்கள் நம்மோடு உழைப்பவர்கள், நம் பண்பாட்டைப் பின்பற்றுபவர்கள் என்று ஒவ்வொருவரும் எண்ண முடியாததா லேயே நாம் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டு அழிக்கப்படுகின்றோம். ஆரியப்பார்ப்பனிய ஆளுமைக் கொள்கையை வீழ்த்துவதற்குச் சரியான அரசியல் கொள்கையை உருவாக்க வேண்டிய காலச் சூழலில் தமிழ்நாடு இன்று இருக்கிறது.

ஒரு சிக்கலை மறைப்பதற்கு அல்லது திசை திருப்புவதற்கு இன்னொரு சிக்கலை ஆரியம் முன்னிலைப்படுத்தும். ஒரு சாதியை எதிர்ப்பதற்கு இன்னொரு சாதியைப் பயன்படுத்தும்; ஒரு மதத்தினரை எதிர்ப்பதற்கு இன்னொரு மதத்தினரை பயன்படுத்தும்; ஒரு தேசிய இனப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு இன்னொரு தேசிய இனத்தைப் பயன்படுத்தும். இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல தேசிய இனங்களை வெளி நாட்டாருக்குக் காட்டிக் கொடுத்ததிலும்

இன்று எல்லாவற்றையுமே முழுமையாக விற்றுவிட்டதிலும் ஆரியப் பார்ப்பனர்களின் பங்கே முகாமையானதாகும்.

ஆகவே, ஆரியப் பார்ப்பனியக் கொள்கையால் அதிகம் அழுத்தப்படுகின்ற ஒடுக்கப்பட்ட சாதிய மக்களின் தலைமையிலான எழுச்சியே, அதை முழுமையாக வீழ்த்தும். ‘ஒவ்வொரு செயலுக்கும். அதற்குச் சமமான எதிர்வினை உண்டு’ — என்ற எந்திரவியல் கொள்கையைக் குமுகாய அறிவியலுக்கும் பயன்படுத்தித் தமிழினத்திற்குள்ள அறிவுக் கூர்மையை உலகுக்கு வெளிப்படுத்து வோம். மற்ற ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களுக்கும் வழிகாட்டு வோம். தமிழக மக்கள் விடுதலைப் போருக்கான பறை முழக்கத்தை நம் முன்னோடிகள் தொடங்கிவிட்டனர். அவர்களின் பின்னால் அணிவகுத்து ஆரியப் பார்ப்பனியத்தை வீழ்த்துவோம்! ஆயிரம் ஆண்டுக்கால அடிமைத் தளையை அறுத்தெறிவோம்!!

சின்ன காவணத்தில் பள்ளிப் பறவைகள்!

தி.பி. 2029 மேழம் 8 (21-4-98) செவ்வாய்க் கிழமை மாலை 5.30 மணிக்கு, பொன்னேரி – சின்ன காவணம் ‘பாவலரேறு பெருஞ்சித்திரனார் தாய்த் தமிழ்ப் பள்ளி’யின் மூன்றாம் ஆண்டு விழா திரு. து. பாரதிதாசன் தலைமையில் பேராசிரியர் இன்குலாப் அவர்கள் சிறப்புரை ஆற்ற, திருவாட்டி இறை. பொற்கொடி அம்மையார் வாழ்த்துரையுடன் இனிதென நடைபெற்றது.

சின்ன காவணம் அழகிய சிற்றூர். மழலைப் பிஞ்சுகளின் வாயில் ‘பாவலரேறு பெருஞ்சித்திரனார் பள்ளியில் படிக்கிறேன்’ என்ற தெளிவான சொற்கள்! ‘முசுதப்பா’ — ‘காதலா காதலா’ போன்ற திரைப் படப் பாடல்களையும், இராமாயணம், பாரதம் போன்ற பழங்கதைகளையும் நடித்துக்காட்டும் பள்ளிகளுக்கிடையில், கருத்துள்ள மணிப் பாடல்கள், பிறமொழி படிப்பதால் வரும் கேட்டினை, ஒரு தாயின் வாயிலாகச் செய்து காட்டிய ஐந்து அகவைச் சிறுமி “ஆங்கிலப் பள்ளியில் படிக்க வச்சு எம்பிள்ளை இரண்டுங் கெட்டான் ஆனதே!” என்ற புலம்பல்; ‘இருப்பாய் தமிழா! நெருப்பாய்’ என்ற பாடலுக்குச் சிறிய பாவை (பொம்மை) ஆடுவது போன்ற சிறுமியின் நடனம் முதலியன பாராட்டுக்குரியன.

திரைப்படக் கலவை அற்று நடைபெறும் சிறப்பான ஆண்டு விழாவைக் கண்டு களிக்கவும், எழுதி வெளியிடவும் இது போன்ற தமிழ்ப் பள்ளிகளுக்குச் செய்தியாளர்களும் பிறரும் வருவதில்லை.

மாசு மருவற்ற பிஞ்சு உள்ளங்களில் உண்மைக் கருத்துகளை யும், அறிவுத் தெளிவையும் புகட்டும் இதுபோன்ற தாய்த்தமிழ்ப் பள்ளிகளுக்கு, அரசு இசைவு சலுகை அடிப்படையில் நன்கு ஊக்குவித்தாலே, ஆங்கிலப் பள்ளிகள் தாமே அழியும், தமிழ்ப்பள்ளி கள் வளரும்!

மொழித்தூய்மை – சில விளக்கங்கள்

தமிழர்கள் தங்கள் தாய்மொழியாகிய தமிழ் வழியில் பயின்றால் தான் அறிவுத் திறன் வளர்ந்து தமிழர்களிடையே சிறந்த சிந்தனை யாளர்கள், புதுமை படைக்கும் அறிவியலாளர்கள் தோன்ற முடியும்.

தாய்மொழி வழிக் கல்வி பயிற்றுதற்குப் பலதுறை நூல்களையும் தமிழில் உருவாக்க வேண்டும்; அதற்குப் போதுமான கலைச் சொற்கள் தமிழில் இல்லாமையால் பிறமொழிச் சொற்களைத் தமிழில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று சிலர் இன்னமும் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் வளம்பெறப் பிறமொழிச் சொற்களை அப்படியே எடுத்தாள வேண்டும் என்பது மொழி வளர்ச்சிக்கும் அறிவியல் வளர்ச்சிக்கும் உகந்ததன்று. சிந்தனை வளத்துக்குப் பிறமொழிக் கலவை கேட்டையே தரும்.

மொழி பெயர்ப்பில் பிறமொழிச் சொற்கள் இடம் பெறுவதை விடத் தமிழ்ச் சொற்கள் இடம் பெறுவதே தெளிவான அறிவு வளர்ச்சிக்கு வழிவகுக்கும். 'Natural Science' என்பதைப் 'பிரகிருதி சாஸ்திரம்' என்று மொழி பெயர்த்தார்கள். அது விளங்கவில்லை. பின் 'இயற்கை விஞ்ஞானம்' என்று மாற்றினார்கள். ஓரளவு விளங்கியது. இப்போது தூய தமிழில் 'இயற்கை அறிவியல்' என்கின்றனர். இதுவே நன்கு விளங்குகின்றது.

Aero Plain என்பதை மக்கள் பறக்கும் கப்பல் என்றனர். இன்றும் இச்சொல் சிற்றூர்ப் புறங்களில் வழக்கத்தில் உள்ளது. இவ்வகையில் அறிவியற் கலைச் சொற்களைத் தூய தமிழில் மொழி பெயர்த்துக் கொள்ளலாம்.

பழந்தமிழ் நூல்களில் இடம் பெற்றுள்ள பிறமொழிச் சொற்களை நன்கு ஆராய்ந்து அவை உண்மையில் பிறமொழிச் சொற்கள்தாமா என்பதை உறுதிப்படுத்துதல் இன்றியமையாதது.

வடசொற்களாகக் கருதப்பட்ட தாம்பரம், தாமரை என்னுஞ் சொற்கள் தூய தமிழ்ச் சொற்களே என்று விளக்கிக் காட்டும் மொழி ஞாயிறு பாவாணர், 'இங்ஙனமே நூற்றுக்கணக்கான தென்சொற்கள் வடமொழியில் இனம் மறைந்து வழங்குகின்றன' என்றும், இவ்வாறே மாதம், சமயம், மதம், முகுடம் (மணிமுடி), வரணம் என்பன போன்ற

ஆயிரக்கணக்கான தூயதமிழ்ச் சொற்கள் சமற்கிருதச் சொற்களாக அல்லது வேற்றுமொழிச் சொற்களாகக் காட்டப் படுவதாகவும் கூறுகிறார்.

உலகமொழிகளில் தமிழ்ச்சொற்களின் மூலங்கள் இடம் பெற்றிருக்கின்றன என்பதை மொழிஞாயிறு பாவாணர் தெளிவுறக் கூறுகின்றார். சொல்லாய்வு அறிஞர் அருளியாரும் இதனை வலியுறுத்துகின்றார்.

கிடங்கு என்னும் தமிழ்ச்சொல் தமிழர்களோடு மலேயா சென்று Gadong என்றாகி, ஆங்கிலேயர்களால் Godown என்று வழங்கப் பட்டுள்ளது எனச் சொல்லாய்வு அறிஞர் அருளியார் கூறுகிறார். புறநானூறு *(319; 258, 9)*, அகநானூறு *(166)*, பரிபாடல் *(20 : 52–54)* ஆகிய பழந்தமிழ் நூல்களில் இடம்பெற்றுள்ள சாடி என்னும் தூய தமிழ்ச்சொல் ஜாடி என — சமற்கிருதத்திலும் இந்தியிலும் வழங்கப் படுவதை அவர் எடுத்துக்காட்டுவதோடு, பாசம், நேசம், பாரம், தாரம், தூரம் போன்ற நூற்றுக்கணக்கான தூயதமிழ்ச் சொற்கள் வடமொழி யின் திரிபுகள் எனப் பேசிவருகிறார்கள் எனக் கூறுகிறார்.

எனவே, பிறமொழிகளில் மறைந்து கிடக்கும் தமிழ்ச் சொற்களைக் கண்டறிவதோடு, தமிழ் மூலங்களிலிருந்து சென்று பிற மொழிகளில் திரிந்து வழங்கும் சொற்களையும் இனங்கண்டு அவற்றை ஒலி மாற்றம் செய்துகொள்ள வேண்டும்.

தமிழில் அறிவியல் இல்லை என்றும் ஆகவே, அறிவியல் தமிழ் என்ற ஒன்றைப் புதிதாக உருவாக்கச் சிலர் முற்படுகின்றனர்; இயல், இசை, நாடகமென முன்னோர் கண்ட முத்தமிழோடு அறிவியல் தமிழ் என்ற ஒன்றையுங் கூட்டி நாற்றமிழ் என்றாக்க வேண்டும் என்கின்றனர்.

பழங்காலத்திலேயே இசை, நாடகம், கணிதம், கணியம், ஏரணம் (தருக்க நூல்), மந்திரம், மறை, பட்டாங்கு, மடை, மருத்துவம், அறம், அரசியல் முதலான பலதுறை நூல்களை அறிஞர்கள் தமிழில் ஆக்கி யுள்ளனர். ஆகவே அறிவியல் தமிழ் என்று ஒரு புதுத்தமிழை ஆக்கத் தேவையில்லை. அறிவியல் யாவும் முத்தமிழிலேயே அடக்கம்.

அறிவியல் கலைச் சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்க முடியாது எனக் கூறுவதும் அறிவியல் தமிழ் என்னும் புதுத்தமிழும் தவிர்க்கப்படல் வேண்டும். கலைச் சொற்கள் தமிழாக்கத்தில் மொழி யறிவும் அறிவியலறிவும் இணைந்தால்தான் எளிதாகும். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்பதற்கும் பொருளுண்டு.

— **நெல்லை அதியமான்,** தாழையூத்து.

செய்திகள்

பெங்களூர்த் தமிழ்ச்சங்கம் — பாவேந்தர் நூற்றாண்டு நினைவு அறக்கட்டளைப் பொழிவு!

பாவேந்தர் நூற்றாண்டு நினைவாகக் கருநாடக மாநிலத் தமிழாசிரியர் கழகம் நிறுவியுள்ள அறக்கட்டளைச் சொற்பொழிவு பெங்களூர்த் தமிழ்ச்சங்கத் திருவள்ளுவர் கலையரங்கில் தி.பி. 2029, மேழத் திங்கள் 6-ஆம் பக்கல் (19.4.98) காலை 10.30 மணி அளவில் நடைபெற்றது.

கருநாடக மாநிலத் தமிழாசிரியர் கழகத்தலைவர் பேராசிரியர் க. சுப்பிரமணியன் அவர்கள் தலைமை ஏற்க, தமிழ்ச்சங்கத் துணைத் தலைவர், கு. செகநாதன் வரவேற்புரை ஆற்றினார்.

தென்மொழி அன்பரும் மாயனூர் மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதுநிலை விரிவுரையாளருமான முனைவர் கடவூர் மணிமாறன் அவர்கள், **தமிழியக்க முன்னோடிகள் பாரதிதாசனும் பெருஞ்சித்திரனாரும்** என்னும் தலைப்பில் அறக்கட்டளைப் பொழிவு நிகழ்த்தினார்.

இருபெரும் பாவலர்களைப் பற்றிய ஒப்பாய்வு உரையினைக் கேட்டுத் தென்மொழி அன்பர்களும், பெங்களூர்வாழ் தமிழார்வலர்களும் பெரிதும் மகிழ்ந்தனர். பெங்களூர்த் தமிழ்ச்சங்கச் செயற்குழு உறுப்பினர் மா. விசயபூபதி இறுதியில் நன்றி நவின்றார்.

ஏரிக் கரைப் பாவரங்கப் பொறுப்பாளர் இராம. இளங்கோவன், பாவலர்கள் இரா. மணிவண்ணன், பொன்னரசு, வில்வநாதன், வே. கல்யாணகுமார், கரிகிரி இளந்தென்றல், மலர்மன்னன், அன்புச்செல்வி, மதலைமணி மகேந்திரன் உள்ளிட்ட பலரும் நிகழ்ச்சிக்கு வருகை நல்கிப் பெருமை சேர்த்தனர். விழா ஏற்பாடுகளைப் பெங்களூர்த் தமிழ்ச் சங்கத்தினரும், புலவர். சு. காமராசு, புலவர். வீ. மணிவண்ணன், இராம. இளங்கோவன் ஆகியோரும் சிறப்பாகச் செய்திருந்தனர்.

தமிழ் அமைப்புகளின் முற்றுகைப் போராட்டம்!

தமிழ்நாட்டில் ஆட்சிமொழி, பயிற்சிமொழிச் சட்டங்களை அனைத்து நிலைகளிலும் முழுமையாக நடைமுறைப்படுத்தக் கோரியும் இவை தொடர்பாக இன்னும்பல விரிவான கோரிக்கைகளை முன்வைத்தும் தலைநகர்த் தமிழ்க் கழக ஒருங்கிணைப்பில் — தமிழ் இயக்கங்கள் சட்டமன்ற வளாகத்தில் முதலமைச்சரை முற்றுகையிடும் போராட்டம் தி.பி. 2029 மேழம் 11 (24.4.98) வெள்ளி அன்று நடைபெற்றது.

அன்று (ஏப். 24) காலை 10 மணியளவில் சென்னை – குறளகம் அருகில் முனைவர் தமிழண்ணல் அவர்கள் தலைமையிலும் புலவர் இறைக்குருவனார், புலவர் முத்து எத்திராசன், புலவர் ப. சாத்தன், புலவர் வே. திருவேங்கடம், திரு. நா.வை. சொக்கலிங்கம் ஆகியோர் முன்னிலையிலும் முற்றுகைப் பேரணி தொடங்கியது. தலைவர் சுந்தரராசன் வரவேற்றுப் பேசினார். திரு. சா. சந்திரேசன் தொடக்கவுரையாற்றினார்.

திரு. பழ. நெடுமாறன் (தமிழர் தேசிய இயக்கம்), பா. பன்னீர்ச் செல்வம் (த.நா.ம.இ.லெ.க.), வழக்கறிஞர்கள் பொ.வே. பத்தவச்சலம், செந்தில்நாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பேரா. இரா. சேது பேரணியைத் தொடங்கி வைத்தார். எழுச்சியுடன் சென்ற பேரணியைப் பாரிமுனையில் காவல்துறையினர் தடுத்து நிறுத்தி மகளிர் எண்மர்

உள்ளிட்ட நூறு பேரை மட்டும் தளை செய்து சென்று துறைமுகம் காவல் நிலையத்தில் சிறைப்படுத்தி வைத்தனர். தளைப்படுத்திய நேரத்தில் புலவர் சுந்தரராசனைக் காவல்துறையினர் இழுத்துத்தள்ளி அடித்ததைக் கண்டித்துக் காவல் நிலையத்தில் சிறைப்படுத்தப்பட்டோர் அனைவரும் பட்டினிப் போராட்டம் நடத்தினர்.

காவல் நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் புலவர் இறைக்குருவனார், புலவர் செ. வரதராசன், வெற்றிச்செழியன், புலவர் குமர. தன்னொளியன், திரு. தமிழ்க்கதிர், திரு. ஆ.வே. இராமசாமி ஆகியோர் உரையாற்றினர். அன்று மாலை 6 மணியளவில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கன்னடப் பாவலருக்குச் சென்னையில் சிலை:
மாநகராட்சி இசைவளிக்கக் கூடாது!
— வைரிசெட்டிபாளையம் திருக்குறள் பேரவை தீர்மானம்!—

காவிரி நீர் உரிமையில் கன்னட மாநிலத்தவரால் தமிழ்நாடு பெரிதும் வஞ்சிக்கப்பட்டு வருகிறது. முறையாக இசைவுபெற்று நிறுவிய திருவள்ளுவர் சிலை கடந்த ஏழாண்டுகளாகத் திறக்கமுடியாமல் தடைப் படுத்தப்பட்டுள்ளது. இந்நிலையில் தமிழ்நாட்டின் தலைநகரில் கன்னடப் பாவலருக்குச் சிலை திறப்பது தமிழரின் ஏமாளித் தன்மையையும் கன்னடரின் எழுச்சித் தன்மையையும் மிகுதிப் படுத்தும். இது தமிழினத்திற்கே பெருத்த அவமானம். ஆதலால் பெங்களூரில் திருவள்ளுவர் சிலை திறக்கப்பெற்றுத் தக்க பாதுகாப்பு அளிக்கப்படும் வரையில், சென்னையில் கன்னடப் பாவலர் சிலைதிறக்க அனுமதிக்க வேண்டாம் என்று வைரிசெட்டிபாளையத் திருக்குறள் பேரவை தி.பி. 2029 மீனம் 29 அன்று நடைபெற்ற பேரவையின் 10-ஆம் ஆண்டு விழாவில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

சீத்தலைச் சாத்தனார் — பணி ஓய்வுப் பாராட்டு விழா!

தென்மொழிக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு கடந்த இருபது ஆண்டுகளுக்கு மேலாக அருந்தமிழ்ப்பணி ஆற்றி வருபவரும் உ. செல்லூர் உதவிபெறும் பள்ளியின் தலைமையாசிரிய மேலாளருமான சீத்தலைச் சாத்தனார் (வீ. சீத்தாராமன்) அவர்கள் பள்ளிப் பணியினின்று ஓய்வு பெறுவதை யொட்டி, தி.பி. 2029 மேழம் 4-ஆம் பக்கல் அன்று (18.4.98) பிற்பகலில் களமருதூர் ஒன்றியப் பயிற்சி நடுவத்தில் திருநாவலூர் திரு. மு. அண்ணாமலை அவர்கள் தலைமையிலும், திருவாளர்கள் ஏ. அருணாசலம், இ. செயராமன் ஆகியோர் முன்னிலையிலும் பாராட்டு விழா நடைபெற்றது. திருவாட்டி த. இலட்சுமியின் தமிழ் வாழ்த்தொடு தொடங்கிய இவ் விழாவில் திரு. தொ. சின்னதம்பி வரவேற்புரை யாற்றினார்.

திரு. தெய்வசிகாமணி பொன்னாடை போர்த்தியும், திரு. கு. சிங்காரம் கணையாழி சூட்டியும் விழா நாயகரைச் சிறப்பித்தனர். திருவாளர்கள் இல. ஆறுமுகம், அ.பொ. சுப்பிரமணியன், கி. இராமலிங்கம், ப. கணேசன், க. சிவலிங்கம், இரா. கோவிந்தராசலு, ஆ. கண்ணையன், கோ. கோவிந்தன், மு. அபுதுல் அசீசு ஆகியோர் பாராட்டிப் பேசினர். சொல்லாய்வு அறிஞர் அருளியார் அவர்கள் சீத்தலைச் சாத்தனாரைப் பாராட்டிச் சிறப்புரை யாற்றினார். சாத்தனாரின் ஏற்புரைக்குப் பின் திரு. கு. கேசவன் நன்றி நவின்றார்.

நமக்கு வந்த மடல்கள்

0 : 1650 அன்புக்கெழுமிய ஐயா அவர்கட்கு வணக்கம்.

பாவலரேறு அவர்களின் 'தமிழ்க்களம்' அமைப்பிற்கான பொருட்கொடைத் தொடர்பாக அம்மா அவர்கள் விடுத்திருந்த மடல், ஐயா அவர்களின் சிறப்பு மலர்த் தொடர்பாக நீங்கள் விடுத்திருந்த மடல் ஆகியன உரிய நாளில் கிடைத்தன. ஐயா அவர்களின் மறைவிற்குப் பின்னர், தாங்கள் அயர்வோ சலிப்போ இன்றித் தொடர்ந்து, இத் தமிழ் மக்கள் ஏற்றங்கருதி உழைத்துவரும் பாங்கு விழிகளை ஈரமாக்குகிறது. தங்களின் எல்லா முயற்சிகட்கும் எம் ஒத்துழைப்பு என்றும் உண்டு.

— பாவலர் **தமிழேந்தி,** அரக்கோணம்.

0 : 1651 பேரன்புடையீர், வணக்கம்!

தென்மொழி சுவடி : 30, ஓலை : 3 கண்டேன். இன்றுள்ள நிலையில் தமிழ் மக்கள் மொழிமானமற்று – இனமானமற்று – நாட்டுமானமற்று எதற்காக வாழ்கிறார்கள் என்பதை 5 ஆண்டுகளுக்கு முன்பே தென்மொழித் தந்தை நுண்ணறிவுடன் எழுதியுள்ள

கோழையாகப் போனோம் — ஊமைக்
குருடராக வாழ்ந்தோம்.

— என்ற பாடல் இன்றுள்ள தமிழ் மக்கள் எண்ணிப்பார்க்கத்தக்கது; எழுச்சி கொள்ளத்தக்கது. சாகாத செந்தமிழ்ச் சொற்கள் சாகின்ற எம் மக்கள் உள்ளத்தில் உறைப்பது என்றோ?

ஆசிரியவுரை – 'வஞ்சப் புகழ்ச்சியா, நெஞ்சார்ந்த பொய்யா?' என்ற இனிய அரிய உண்மையான கட்டுரை திரு. கருணாநிதியின் உண்மை உள்ளத்தை உலகறியத் தோலுரித்துக் காட்டியுள்ளது. மானம் என்று துளிர்க்கும்? தமிழ்மானம் என்று மணக்கும்?

— **அருள்மணி,** வெங்காலூர்.

0 : 1652 ஐயா, வணக்கம்!

"பெருஞ்சித்திரனார் நூல்களை நாட்டுடைமை ஆக்குக!" "பாவலரேறு தமிழ்க்களத்தைத் தமிழ்நாட்டரசே நிறுவ வேண்டும்!" — என்னும் தமிழகத் தமிழாசிரியர் கழகத் தீர்மானம் பற்றிய செய்தி படித்தேன். "தமிழக விடுதலைதான் நம் முழு மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி" என்று தம் வாழ்நாள் முழுவதும் எழுதி, பேசியதோடு மட்டுமன்றி அதுதான் சரியான வழி என்று நமக் கெல்லாம் வழியமைத்துக் கொடுத்த பாவலரேறு ஐயாவின் நூல்களை இந்தியப் பார்ப்பனியத்தின் முட்டுத்தாங்கியான தமிழ் நாட்டரசுகள் நாட்டுடைமையாக்கும் என்று எதிர்பார்ப்பதும் அதற்காகத் தீர்மானங்கள் போடுவதும் சரியாகுமா?

இன்றைக்குக் குறைந்தஅளவு உரிமையான தமிழர் வாழ்வுரிமை பற்றிப் பேசிய அரசியல் கட்சிகளும், தலைவர்களும் அதையெல்லாம் தூக்கியெறிந்துவிட்டு, இந்தியப் பார்ப்பனியத்தைக் கட்டிக் காக்கப் புறப்பட்டுவிட்டதையும், அவர்களை இந்தியப் பார்ப்பனியம்

அரவணைத்துக் கெடுப்பதையும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். தமிழக விடுதலைக் குரலெழுப்புபவர்களை இந்த அரசுகள் எந்தெந்த வழிகளில் முடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் ஒடுக்கி நசுக்கி வருகின்றன.

நிலைமை இவ்வாறிருக்க, பாவலரேறு ஐயாவின் இந்தியப் பார்ப்பனியக் கட்டமைப்புக்கு எதிரான முனை மழுங்காத எழுத்து களையும், பேச்சுகளையும் இந்த (இந்திய) தமிழ்நாட்டரசுகள் எப்படி நாட்டுடைமையாக்கும்? இன்றைய 'பாவலரேறு தமிழ்க்களம்' நாளைய விடுதலையடைந்த தமிழ்நாட்டின் தேசியச் சின்னம் என்பதை மறந்துவிட்டா இந்த அரசுகள் 'பாவலரேறு தமிழ்க் களத்தைக்' கட்டிக் கொடுக்கப் போகின்றன?

இந்திய அரசாக இருந்தாலும் இந்திய அரசக் கட்டமைப்புக்குள் ஒடுங்கிக் கிடக்கும் தமிழ்நாட்டரசாக இருந்தாலும் அவர்களுடைய முற்று முழு இறுதி இலக்கு பார்ப்பனிய இந்தியத் தேசியத்தைக் கட்டிக்காப்பதுதான். ஐயாவின் முற்று முழு இறுதி இலக்கோ அந்தப் பார்ப்பனிய இந்தியத் தேசியத்தை எதிர்த்து வீழ்த்தி அதிலிருந்து தமிழக மக்களை விடுதலையடையச் செய்வது. ஆக, ஒன்றுக்கொன்று நேரெதிர்க் கருத்துகள் கொண்டவை. ஒன்றுக்குள் ஒன்று உள்ளடக்க முடியாதவை.

அதனால் அதுபோன்ற தீர்மானங்கள் போடுவதை விலக்கி வைத்துவிட்டு, ஒருசில எல்லைகளுக்குள் முடங்கிப் போய் கிடக்கும் ஐயாவின் கருத்துகளை – முனை மழுங்காத குத்தீட்டிகளைப் போர்க் குணமிக்க உழைக்கும் மக்களிடத்தில் எடுத்துக் கொடுத்து அவர்களைப் போராட வைப்பதும், சரியான இலக்கை நோக்கி நம்முடைய போராட்டங்களை முன்னெடுப்பதும்தான் இன்றைய தேவை.

— **தமிழ்மண்ணின்மைந்தன்**, சென்னை.

0 : 1653 அன்பின் தமிழ்நலஞ்சான்ற ஐயா, வணக்கம்!

தென்மொழி (*சுவடி : 30, ஓலை : 4*) கிடைத்தது. ஐயாவின் முகப்புப் பாடலும், ஆசிரியவுரையும், முனைவர் அரு. கோபாலன் கட்டுரையும், பாவாணர் பாட்டரங்கப் பாடலும், பிறவும் மிகவும் அருமை!

திரு. பூங்குன்றனார் எழுதியுள்ள அறிவியல் கட்டுரை பிற இதழ் களில் படித்து விளங்காமல் இருந்ததினைத் தெளிவுற விளக்குவதாக உள்ளது. புத்தாக்கச் சொல்லும் புதுமையுடைத்தே!

மிக இளம் அகவையிலே சேலம் வந்துற்ற ஐயா அவர்கள், எங்ஙனம் தான் அறுபருவத் திருக்கூத்து யாத்தாரோ, அறியோம்! எத்துணை இனிமை! குளர்மை! சிற்றூரில் இருந்து கூர்ந்து நோக்கி, ஒருமைப் படுத்தி யாத்துள்ளது — அனைத்துத் துன்ப துயரங்களையும் நீக்கி விடுகிறதாக உள்ளதே! படிக்கப் படிக்க தெவிட்டாத இன்பம்! மழை பொழியும் கார்காலத்தே மஞ்சுக் கூட்டங்கள் சூழ, பாடிவரும் பாடல், ஆடிவரும் மயில், சொல்லொணா மரங்களும், பூக்களும்! அம்மம்மா! மீண்டும் மீண்டும் பாடத் தூண்டுகின்றதே! என் நினைவெல்லாம் எங்கேயோ சென்று விடுகின்றதே!

பாவாணர் விழாப் பாட்டரங்கப் பாடலும் அருமையுடைத்து! இசைதான் தெரிந்துகொள்ள முடியவில்லை. நல்ல நடை!

இளஞ்சித்திரன் பாடலும் நன்றாக உள்ளது. இவ்விதழ் மொத்தத்தில் சிறப்பாக உள்ளது. — **குழந்தை ஈகவரசன்,** திருச்சி.

0 : 1654 ஐயா, வணக்கம்.

மேழ மாத இதழில் வெளியான முனைவர் அரு. கோபாலன் கட்டுரை நனிநன்று. தமிழ்நாட்டில் தோன்றிய பேராய, திராவிடத் தலைவர்கள் எப்படியெல்லாம் தமிழுக்கு எதிராகச் செயல்பட்டார்கள் என்பதைக் கட்டுரை தெள்ளிதின் உணர்த்துகிறது. தமிழ்நாட்டுத் திராவிட இயக்கத் தலைவர்கள் திறனாய்வுக்கே அப்பாற்பட்டவர்கள் எனக் கூறிக்கொள்ளும் தமிழார்வலர்கள் அரு. கோபாலன் கட்டுரையைப் படித்த பிறகாவது தங்களை மாற்றிக் கொள்வார்களா?

— **உறந்தைப் பன்னீர்ச்செல்வம்,** திருச்சி.

சொல்லதிகாரம்

❍ நம்மிடம்
இருப்பவையெல்லாம்
சொற்கள்தாம்!

நேயம் வளர்க்கும்
பூக்களாய்த் தொடுக்கலாம்.

மாந்தம் செதுக்கும்
பாக்களாய் வடிக்கலாம்.

உரிமை நாட்டும்
வாள்களாய் வீசலாம்.

நமக்குள்
இருப்பவையெல்லாம்
சொற்கள்தாம்!

❍ புலன்களால் உணர்வதை'
புதிதாய் அறிவதை'
சொற்களாய் மாற்றித்
திரட்டுகிறது மூளை.

இங்கே
பலுக்கப்படாமலே
உருக்குலைந்தவை நிறைய!

❍ ஒலிபெருக்கி நனையச்
சில 'சொல் வாணிகர்கள்'
பேசக் கேட்பது

கம்பியால்
காது குடைவது போல்....!

❍ பெரும்பாலும்
சொல் நயம்
சொல் நாநயம்
இரண்டும் இணைவதில்லை,
அழகும் அறிவும் மாதிரி.

சொல்லப்போனால்,
அறிவுதானே அழகு!

❍ காதலிலும் பாவிலும்
அமைதியே பேசும்!

❍ சொற்களைச் சொடுக்குவது
உதடல்ல ...
ஓசையல்ல ...
தொடரிய அமைப்பல்ல ...
சொல்பவனின் நேர்மை!

❍ செழிப்பால் அடர்ந்த
காடெனலாம் மொழியை.

பறவைகளாய் நாம்
உச்சத்தில் கூடுகட்டி
உயரத்தில் பறந்து
விடுகிறோம்.

வெளிச்சத்துக்கு வராத
வேர்ச் சொற்கள் தேடி
நடை தொடருவது
எக்காலம்?

—தீபன், ஆர்க்காடு.

நெல்லை – தனித்தமிழ் இலக்கியக் கழகத்தில் பாவலரேறு ஐயா பிறந்தநாள் விழா, கட்டுரைப் போட்டிப் பரிசளிப்பு!

நெல்லை, தனித்தமிழ் இலக்கியக் கழகச் சார்பில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் பிறந்த நாள் விழா, நெல்லைத் தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் தி.பி. 2029, மேழத் திங்கள் 12-ஆம் பக்கல் (25.4.98) காரிக் கிழமை, கழகத் தலைவர், முனைவர் பா. வளனரசு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பாவலர் முல்லைமுருகன் அனைவரையும் வரவேற்றார். பாவேந்தர் பாவலரேறு பாடல்கள் பற்றி ஒப்பாய்வு செய்து முனைவர் பட்டம் பெற்ற மாயனூரார். மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவனத் தமிழ்ப் பேராசிரியர் முனைவர் கடவூர் மணிமாறன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார்.

மாநில அளவிலான கல்லூரி மாணவ, மாணவியர்க்கான, பாவலரேறுவின் பைந்தமிழ்த் தொண்டு என்னும் தலைப்பில் அமைந்த கட்டுரைப் போட்டியின் முதற் பரிசை, தென்மொழி ப. துரையரசனாரின் மகள் து. கனிமொழி பெற்றார். அவருக்குப் பொற்பதக்கமும் சுழற்கோப்பையும் நூல்களும் பரிசாக வழங்கப்பெற்றன. அருள்தந்தை செபசுதியான் வாழ்த்துரை வழங்கத் திருவாட்டி சிவசத்தி நன்றி நவின்றார்.

வேம்பையன் துணைவியார் மறைவு!

அருந்தமிழ் ஆர்வலரும் தென்மொழியன்பருமான கல்பாக்கம் வ. வேம்பையன் அவர்களின் துணைவியார் திருவாட்டி சுசீலா அம்மையார் (அகவை 58) தி.பி. 2029 மேழம் 9 அன்று (22.4.98) இயற்கை யெய்தியமை யறிந்து வருந்துகிறோம். அம்மையாரது பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தார்க்குத் தென்மொழியின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேழம் 20 ஞாயிறு (3.5.98) அன்று முற்பகல் மறைமலை நகரிலுள்ள திரு. வேம்பையன் அவர்களின் தொல்காப்பியர் இல்லத்தில் திருவாட்டி சுசீலா அம்மையாரின் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. அம்மையாரது படத்தை திருவாட்டி புனிதவதி சண்முகம் திறந்து வைத்தார். திருக்குறள் (நிலையாமை, ஊழ்) பாக்களைச் செல்வி அ.நி. அடலியும், அவற்றின் பொருளைச் செல்வி க.மா. அறிவுச் சுடரும் ஓதினர். திருவாட்டி. சீதாராசாராமன் நன்றி நவின்றார்.

த.நா.செ. (ந) மா. 7211 பதிவு எண் : 8119/63 தென்மொழி

பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி

- பாவலரேறு ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி தி.பி. 2029 விடை 30 காரி (13.6.98) அன்று செங்கழுநீர்ப்பட்டில் (செங்கற்பட்டில்) நடைபெற உள்ளது.

- நிகழ்ச்சியில் ஐயா அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவு (தென்மொழி) மலர், வெளியிடப்பெறுகிறது.

ஐயா அவர்களைப் பற்றி அரசியல் தலைவர்களும் அறிஞர் பெருமக்களும் பாவலர்களும் மற்றும் பல்துறை வல்லுநர்களும் தீட்டும் எழுத்தோவியங்கள் மலரைச் சிறப்பிக்கின்றன.

- ஐயா அவர்களின் பெரும்பணிகள் பற்றிய பாவரங்கமும், தென்மொழியின் அரும்பணிகள் பற்றிய கருத்தரங்கமும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் இடம்பெறுகின்றன.

தமிழ்நெஞ்சங்களின் வருகையை எதிர்நோக்குகிறோம் !

— 'பாவலரேறு பெருஞ்சித்திரனார் அறக்கட்டளை'.

நிகழ்ச்சியில் பாவலரேறு ஐயா அவர்களின்
புதிய நூல்கள் (இதுவரை வெளிவராதவை) கிடைக்கும்.
நூல்கள் வாங்குவோருக்குத்
தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் பழைய படிகள்
இலவயமாகவும் கொடுக்கப்பெறும்.

'தென்மொழி அச்சகம்', சென்னை - 5. தொலைபேசி : 854 7829